# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 51
விலை ரூபாய் 20.00

தீபம்–51 | ஆடி, ஆவணி இதழ் – 2018,
ஆரம்பம் 15 மாசி - 2013



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


## ஜூபிலி சிறப்பிதழ்



## ஆயரின் செய்தி

கிறிஸ்து இயேசுவில் அன்புமிக்க சகோதரர்களே,

இம்மாதம் எமக்கு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாதமாகும். 25ம் திகதி ஆகஸ்ட் மாதம் 1893ல் எமது மறைமாவட்டம் புதிய, தனி மறைமாவட்டமாக திருத்தந்தை 13ம் லியோவினால் பிரகடனப்படுத்தப்பட்டது. இம்மாதம் 25ம் திகதி 125வது வருட நிறைவில் நன்றியோடும் பூரிப்போடும் மறைமாவட்ட யூபிலியை சிறப்பிக்கவுள்ளோம். யூபிலி ஆண்டின் முக்கிய நிகழ்வாக மறைமாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் மூன்று நாள் சிறப்பு ஆன்மீக ஆயத்த வழிபாடு நடைபெறும்.

125 வருட இறைநம்பிக்கைப் பயணத்தில் பல ஆயர்கள், குருக்கள், துறுவறத்தவர், பொதுநிலை விசுவாசிகள் அர்ப்பண உணர்வோடு தமது பங்களிப்பை செய்துள்ளார்கள். இவர்களை நாம் நன்றியோடு நினைவு கூறுகின்றோம். விசேடமாக வெளிநாடுகளிலிருந்து வந்து பணியாற்றிய மிஷனரி குருக்கள் ஆன்மீகம், கல்வி, விளையாட்டு சமூகப்பணிகளில் அர்ப்பணிப்போடு ஈடுபட்டு தமது பங்களிப்பை செய்தார்கள். ஆயர் இக்னேசியஸ் கிளெணி ஆண்டகை தனது பணிக்காலத்தில் பல சுதேச குருக்களை உருவாக்கியுள்ளார். ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை 1983ல் பொறுப்பேற்ற மாதமே யூலை கலவரம் தொடங்க ஆயரது பணிக்காலத்தின் பெரும்பகுதி உள்நாட்டுப் போர் மற்றும் சுனாமி அனர்த்தங்களின் விளைவுகளை எதிர்கொள்வதில் கழிந்தது. இக்காலத்தில் சமூகப் பணிகள் பெருமளவில் நடைபெற்றன. இவ்வாறு ஆயர்கள் குருக்கள் தமது காலங்களில் தேவைக்கேற்ப தமது பங்களிப்பைச் செய்துள்ளார்கள்.

தொடர்ச்சி 2ம் பக்கத்தில்....



## ஆயர்த்துவ திருப்பொழிவு

3ம் ஆண்டு நிறைவு

25.07.2018

ஆயரின் பணிவாழ்வு சிறக்க செபித்து வாழ்த்துக் கூறிய அனைவருக்கும் இறையாசீரும் நன்றிகளும்

## இலங்கைப் பேராயர் கல்விக்கு முக்கியத்துவம்



இலங்கையில் 1960களில் கத்தோலிக்கப் பள்ளிகள், அரசுடமையாக்கப்பட்டபோது, மிகப்பெரிய சவால்களை எதிர்கொண்டதாக, கொழும்பின் முன்னாள் பேராயர் ஆசுவால்டு கோமிஸ் அவர்கள் கூறினார்.

பேராயர் கோமிஸ் அவர்கள், ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழா, கடந்த ஜூலையில் சிறப்பிக்கப்பட்ட வேளையில், இலங்கை அரசுத்தலைவர் மைத்திரபால சிறிசேனா அவர்கள், பேராயர் அவர்களின் மிகச்சிறப்பான பணிகளை பாராட்டி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய 85 வயது நிறைந்த பேராயர் கோமிஸ் அவர்கள், கத்தோலிக்கரைத் தாக்கும் நோக்கத்தில் எடுக்கப்பட்ட அரசின் அக்கொள்கை ஏற்கத்தக்கதல்ல என்றார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

## இயேசுவோடு

## 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை



இடம் : புனித அந்தோனியார் ஆலயம்
மூதூர்.
காலம் : 14.07.2018 (சனிக்கிழமை)
நேரம் : மதியம் 12 மணி முதல்
இரவு 12 மணி வரை

இடம் : புனித வனத்து அந்தோனியார் ஆலயம், செல்வநாயகபுரம்.
காலம் : 14.07.2018 (சனிக்கிழமை)
நேரம் : மதியம் 12 மணி முதல்
இரவு 12 மணி வரை

திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக

செபத்தில் இணைந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகள்

## நவீன காலத்தின் மிக உன்னத திருத்தந்தை




இவ்வாண்டு அக்டோபர் மாதம் 14ம் திகதி வத்திக்கானில் இடம்பெற உள்ள சிறப்புத் திருப்பலியில், அருளாளர் ஆறாம் பவுல் அவர்களை புனிதராக அறிவிக்க உள்ளது திருஅவை. அவர் நவீன காலத்தின் மிக உன்னத திருத்தந்தை என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டார்.

1897ம் ஆண்டு இத்தாலியில் Concesio எனுமிடத்தில் பிறந்த திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள், இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் நடந்துகொண்டிருந்த போது, 1963ம் ஆண்டு திருத்தந்தையாக பொறுப்பேற்று, 1978ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06ம் திகதி காலமானார். இதே ஆகஸ்ட் ஆறாம் தேதியில் தான், 1945ம் ஆண்டு, ஜப்பானின் ஹீரோஷிமாவில் அமெரிக்க ஐக்கிய நாடு அணுகுண்டை வீசியது குறிப்படத்தக்கது.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

## அருட்பணியாளர்களுக்கு அன்பாதரவு காட்டுங்கள்



உங்கள் அருள்பணியாளர்களுக்கு, நட்பு மற்றும் பாசத்துடன் , ஆதரவு அளியுங்கள் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

புனித மரிய வியான்னி அருளப்பர் அவர்களின் விழாவாகிய ஆகஸ்ட் 04 சனிக்கிழமையன்று திருத்தந்தை வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆதாரம் :
வத்திக்கான் வானொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு முழுவதும் உமது நலத்தால் முடி சூட்டுகின்றீர் (தி.பா 65: 11)

## உங்களோடு பேசுகிறேன்..



Rev. Fr. T . கிங்ஸ்லி றொபட்

வாசகப் பெருமக்களுக்கு,

எமது மறைமாவட்டத்தின் 125வது ஜீபிலி ஆண்டினை முன்னிட்டு உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

திருவிவிலியத்திலே பழைய ஏற்பாட்டில் லேவியர் 25ம் அதிகாரத்தில் ஜீபிலி அல்லது அருள்தரும் ஆண்டினைப் பற்றி நாம் வாசிக்கின்றோம். புதிய ஏற்பாட்டிலே லூக். 4: 18-19 வசனங்களிலே அருள்தரும் ஆண்டினைப் பற்றிப் பார்க்கின்றோம். பழைய, புதிய ஏற்பாடுகளிலே வரும் இந்த ஜீபிலி அல்லது அருள்தரும் ஆண்டு என்பதன் பின்புலன்கள் எமது ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுகின்றன.

- பழைய ஏற்பாட்டு மக்களுக்கு - இஸ்ரயேல் மக்களுக்கு: பாவப் பரிகாரப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கடவுளோடு ஒப்புரவாகி விடுதலை பெற்றபின்பு ஜீபிலி கொண்டாட ஏற்பாடாகி இருந்தது.

ஆனால் புதிய எற்பாட்டு மக்கள் - நமக்கு: இயேசுவே தன்னைப் பாவப் பரிகாரப் பலியாக ஒப்புக்கொடுத்து, மீட்பை எமக்குப் பரிசாகக் கொடுத்ததன் விளைவாக அருள்தரும் ஆண்டினை நாம் கொண்டாட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

- பழைய ஏற்பாட்டு ஜீபிலி கானான் தேசத்தை மட்டும் உள்ளடக்கியதாக இருந்தது.

ஆனால் புதிய ஏற்பாட்டு அருள்தரும் ஆண்டோ உலகின் எல்லாப் பகுதியையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது.

- பழைய ஏற்பாட்டு ஜீபிலி யூத மக்களுக்கு என்று மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் புதிய ஏற்பாட்டு அருள்தரும் ஆண்டு, வரையறை அற்ற, அனைத்து மக்களையும் உள்ளடக்கியதாக அமைகிறது.

- இஸ்ரயேல் மக்களுக்கு 50 வருடத்துக்கொருமுறையே ஜீபிலி கொண்டாடப்பட்டது.

ஆனால் நமக்கோ கிறிஸ்துவின் கிருபையால் இப்பொழுதும் எப்பொழுதும் அருள்தரும் ஆண்டினைக் கொண்டாட வாய்ப்புண்டு. எனவே,

1) எப்பொழுதும் இறைவனில் நம்பிக்கைகொண்டு அவர் தயவில், அவர் கிருபையில் மட்டும் தங்கி வாழ முயற்சிப்போம். இஸ்ரயேல் மக்கள் 3 ஆண்டுகள் அறுவடை செய்யாது இறைவனின் கிருபையில் தங்கி வாழ்ந்தனர். எனவே நாமும் வேலை செய்யாது வாளாவிருக்கவேண்டும் என்பதல்ல. மாறாக, எதை உண்பதென்றோ, எதைக் குடிப்பதென்றோ, எதை உடுத்துவதென்றோ கவலைப்படாதிருப்பதாகும். (காண். மத் 6:28...). அதாவது, விலைவாசி உயர்வு, பொருளாதாரச் சிக்கல், கடின வேலைவாய்ப்பு, குடும்பச் சுமை, இயற்கையின் சீரற்ற நிலை என்பவற்றின் மத்தியிலும் இறைவன் நம்மைப் பராமரிப்பார், பாதுகாப்பார் என்ற நம்பிக்கையில் வாழும்போது அருள்தரும் ஆண்டினை நமக்குரியதாக மாற்றலாம்.

2) அனைத்துமே இறைவனுக்கே சொந்தமானவை என்பதை வெளிக்காட்டுவது: நாம் இருப்பதும் இயங்குவதும், எல்லாமே அவரில் தங்கியிருக்கின்றது என்பதனை வெளிப்படையாகக் காட்டும் வண்ணம் எமது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் ஈடுபட்டு அருள்தரும் ஆண்டினை கொண்டாடலாம்.

எனவே, ஜீபிலியை, அருள்தரும் ஆண்டினை இப்பொழுதே கொண்டாடுவோம். அர்த்தமுடன் கொண்டாடுவோம். வளமுடன் வாழ வாழ்த்துக்கள்!

## குட்டிக்கதை Fr. NC

நீண்ட காலத்திற்கு பிறகு அவர் அந்த வீட்டிற்கு வந்திருக்கின்றார். அவரோடு கூட அவரது மனைவி மகளும் வந்திருக்கிறார்கள். சென்ற வாரம் தான் அவர் வெளிநாட்டிலே இருந்து நமது நாட்டிற்கு வந்தவர்.

அவரைக் கண்டதும் வீட்டிலே பெரும் சந்தோசம். அவர் இங்கு இருக்கும்போது அடிக்கடி அங்கு போவார். கொடுப்பதைச் சாப்பிட்டு அன்பாகப் பழகியவர். இப்போது வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறார். அந்த வீட்டிற்கென அவர் கொண்டு வந்த பொருட்கள், பணம் இவைகளை தனது மனைவி மகள் ஊடாக அந்த வீட்டிற்குக் கொடுக்கிறார். அவர்களுக்கு பெரும் மகிழ்ச்சி. தங்களை மறக்காமல் தங்களை நினைத்து கொடுத்தது வீட்டாருக்குப் பெருமகிழ்வாய் இருந்தது.

வெளிநாட்டிலிருந்து வந்தவர் எப்படி என்றாலும் உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பதை உண்மையாக்கி உள்ளார் அல்லவா!

**ஆயரின் செய்தி .................... (01ம் பக்கத் தொடர்ச்சி )**

எனவே எமக்குமுன் பணி செய்தவர்கள் எமக்கு முன் உதாரணமாக விளங்க எமது பணியையும் அர்ப்பணிப்பையும் உணர்ந்து செயல்பட அழைப்பு விடுக்கின்ற காலமிது. யூபிலி ஆண்டு என நாம் மகிழ்ந்து கொண்டாடினாலும் அவை விடுக்கும் சவால்களை நாம் தட்டிக்கழிக்க முடியாது. விழிப்போடும் தெளிவோடும் செயல்படுவோம். இந்நிலையில் எமது மறைமாவட்டத்தின் விசுவாசப் பயணத்தில் ஆயராக, குருவாக, துறவற சகோதர சகோதரியாக, பொதுநிலை விசுவாசியாக எனது அழைப்பும் பங்களிப்பும் என்ன? மறைபரப்புப் பணியிலும் சான்று பகரும் கிறிஸ்தவ வாழ்விலும் எனது பங்களிப்பு என்ன? மறைமாவட்டத்திலும், பங்கிலும் எமது நம்பிக்கை வாழ்வை வளர்க்க உருவாக்கப்படும் சந்தர்ப்பங்களை நான் எவ்வாறு பயன்படுத்துகின்றேன்?

இதுபோன்ற கேள்விகளுக்கு விடை தேடி, தெளிவு பெற்று செயல்படுவோம். உங்கள் அனைவருக்கும் யூபிலி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிறிஸ்துவில்,
பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

## தேசிய மறைக்கல்வி ஆணைக்குழு கூட்டமும் ஒன்றுகூடலும்....

தேசிய மறைக்கல்வி ஆணைக்குழுக் கூட்டமும், மறைக்கல்வி நிலைய பணியாளர்களுக்கான ஒன்றுகூடலும் திருகோணமலை மறைமாவட்டத்தில், உப்புவெளி மேய்ப்புப்பணி நிலையத்தில் கடந்த யூன் 20ம், 21ம் திகதிகளில் நடைபெற்றது.

இவ்வொன்று கூடலை தலைமை தாங்கி வழி நடத்தியவர் தேசிய மறைக்கல்வி இயக்குனர் அருட்பணியாளர் பியால் ஜானக்க அவர்களாவார். தேசிய மறைக்கல்வி ஆணைக்குழுத் தலைவர் பேரருட்திரு மக்ஸ்வல் சில்வா அவர்களும் உபதலைவர் பேரருட்திரு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அவர்களும் கலந்து கொண்டு கூட்டத்தினை வழிநடத்தினார்கள். இந்நிகழ்வினைச் சிறப்பிக்க எல்லா மறைமாவட்டங்களில் இருந்தும் மறைக்கல்வி இயக்குனர்களும், பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இவ் ஒன்று கூடலில் கத்தோலிக்க நிறுவனங்களில் தலைமைத்துவம் எனும் தலைப்பில் அருட்பணியாளர போல் றொபின்சன் உரையாற்றினார். அவ்வுரையில் அவர் கொடுத்த விளக்கம் ஒரு கத்தோலிக்க நிறுவனமானது எவ்விதமான தலைமைத்துவத்தை கொண்டமையும் போது அது வெற்றியுள்ளதாக மாறி, சிறப்பு பயணத்தை தரும் என வெளிப்படுத்தினார்.

சகோதர மொழியில் இயேசு சபைத்துறவி அருட்பணியாளர் லக்ஸ்மன் பீரிஸ் அவர்கள் உரையினை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கதாகும். இரண்டு நாட்களாக நடைபெற்ற ஒன்றுகூடல் சிறப்பாகவும், நேர்த்தியாகவும் நடைபெற ஆயத்தப்படுத்தி வழிநடத்திய மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர், பணியாளர்களுக்கு நன்றிகளும் பாராட்டுக்களும்!

மறைக்கல்வி நடுநிலையம்



## நீதியை வேண்டுவோம்

அருட்பணியாளர் N.C. அருள்வரதன்

பகைமையும் வேறுபாடும்
பரந்தெங்கும் நிறைந்ததனால்
வன்முறையின் நிலைகளெங்கும்
வலம் வரும்போது மண்ணில்
அமைதியைக் காண்பதென்றால்
அதுவே பெரும் கேள்விக்குறியானதே

பெண்களின் வாழ்வு அதிலும்
சிறுபிள்ளைகள் பள்ளி மாணவிகள்
போதைக்கு உள்ளானவர்களால்
வன்புறவுக்குள்ளாகி
வாழ்வழிந்து மடிந்தும்
மறைந்துவிடும் செய்திகள்
பல்கிப்பெருகுவதாய் உள்ளதே

குற்றவாளிகள் இனங்காணப்பட்டு
கடுந்தண்டனை பெற வேண்டும்
இத்தண்டனை
மற்றவர்க்கு பாடமாகும்
பாவம் பிஞ்சுக்குழந்தைகள்
பள்ளிச் சிறுமிகள்
எப்படித் தாங்க முடியும்
இக்கொடுமைகளை
இனியும் இம்மண்ணிலெங்கும்
இவை இடம் பெறாதிருக்க
நீதியே மறையாமல் துலங்க
இறைவனே !
துணை நிற்க வேண்டுவோமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 15

# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்

அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)



## சமூகக் கட்டமைப்பாளர்

பல்லின பல்சமய மக்களைக் கொண்ட நாடு என இலங்கை அழைக்கப்படுகின்றது. சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கின்ற போது, பல சந்தர்ப்பங்களில் இனக் குழுக்களுக்கிடையே, மதக் குழுக்களுக்கிடையே, சாதிக் குழுமங்களுக்கிடையே முரண்பாடுகளும், மோதல்களும் ஏற்பட்டதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான நிலை நீடிக்குமாக இருந்தால் இலங்கையின் தேசியப்பறவையின் (காட்டுக்கோழி) சிறகுகள் நாளடைவில் சிறிது சிறிதாகப் பிடுங்கப்பட்டு குற்றுயிராக்கப்படும் நிலை ஏற்படும்.

பாடசாலையைப் பொறுத்தவரை, இனங்களுக்கிடையிலான முரண்பாட்டை விட மதங்களுக்கிடையிலான முரண்பாடு ஏற்பட வாய்ப்புண்டு. பல்மதம் சார்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ள பாடசாலையில் பாடசாலைக்கு உள்ளும், வெளியிலும் முரண்பாடுகள் ஏற்பட்ட சம்பவங்கள் கடந்த காலங்களில் நடந்தேறியுள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது. மதங்களெல்லாம் இறைவனோடு எம்மை ஒன்றிக்கச் செய்து இறைசாயலான மக்களோடு எம்மை ஆழமான உறவுக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்பதே ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியாகும். மதங்கள் கைகொடுக்கும் பாதைகள் வெவ்வேறேயொழிய சேருமிடம் ஒன்றே. இலங்கைத் தீவைப் பொறுத்தவரை நடைமுறையில் எவ்வாறு உள்ளதென்பதை நாம் அறிவோம். ஒரு மதத்தினர் ஏனைய மதங்களைப் பார்த்துப் பயப்படுவதும், மதக் கலாசாரங்களை அவமதிப்பதும், கேலி செய்வதும் மதவெறுப்புத் தன்மையை வெளிப்படுத்துவதும் பழகிப்போன விடயங்களாகி விட்டன. சமூகத்தில் பிரதிபலிக்கும் இந்நிலை சில பாடசாலை சமூகத்திற்குள்ளும் எதிரொலிக்கும் நிலையை அவதானிக்கலாம். இந்நிலை மாற்றப்பட வேண்டுமெனில் பாடசாலைக்கு உள்ளேயே எமது கவனத்தைச் செலுத்த வேண்டும். மத, இன. சமூக ஒருமைப்பாடு எமது பாடசாலைக்கு உள்ளிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டியதாகும்.

இணக்கப்பாடுள்ள சமூகக் கட்டமைப்பாளர் என்ற வகையில் ஆசிரியருக்கு இதில் பெரும் பங்குண்டு. தனது மதத்தில் பற்றுறுதியும், ஏனைய மதங்களை மதிக்கும் மனநிலையும் மாணவர்களில் வளர்த்தெடுக்க ஆசிரியரின் வகிபாகம் முக்கியமானதாகும். அத்தோடு பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்திச் சபை. பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆகியோரின் நேர்மனப்பாங்கும் இதற்கு மிக முக்கியமானதாகும்.

பாடசாலையில் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம்?

பாடசாலை மாணவர்கள் சார்ந்துள்ள சமயங்களின் பிரதான திருவிழாக்களை பாடசாலைக்குள்ளே ஏற்ற முறையில் கொண்டாடலாம். இது ஓர் ஆரம்பம் மட்டுமே. ஒவ்வொரு மாணவனும் பாடசலை நலன்களைப் பாதிக்காத வகையில் தனது நம்பிக்கையைப் பின்பற்ற உரிமையுடையவர் என்பதை ஆசிரியர்கள் ஆழ்மனதில் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் ஏனைய மத நம்பிக்கைகளை மதிக்கவும். முடிந்தளவு சகித்துக் கொள்ளவும் கற்றுக் கொடுக்க வேண்டும். இந்த விழிப்புணர்வை மாணவர்களிடையே கட்டியெழுப்புவது தமது உத்தமமான பணி என்பதை ஆசிரியர் உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனைய மதக் கொண்டாட்டங்களில் முடிந்தளவு மாணவர்களை ஈடுபடுத்துவதும், உள்வாங்கிக் கொள்வதும் ஆசிரியரின் பணியாகும்.

பாடசாலையின் முக்கியமான நிகழ்வுகளில், போட்டிகளில் மத வேறுபாடின்றி மாணவர்களைப் பங்கேற்கச் செய்வதற்கான ஆரோக்கியமான தெரிவு முறை பாடசாலை முறைமையினுள் உட்புகுத்தப்பட்டிருப்பதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மதம் சார்ந்த பாடசாலைகளாக இருந்தாலும் காலைக்கூட்டம் எல்லா மத மாணவர்களின் நம்பிக்கையைத் தொடக் கூடியதாக அமைந்திருத்தல் நல்லிணக்கத்திற்கான சூழலை ஏற்படுத்தும்.

பல்மத, பல்லின கலாசார மாணவர்கள் பயிலும் பாடசாலையில் மதம்சார், கலாசாரம்சார் உடைகளையோ, அடையாளங்களையோ வலியுறுத்தாமல் இருப்பது ஆரோக்கியமானதாகும்.

இவை யாவற்றையும் அடித்தளத்திருந்தே கட்டியெழுப்புவது சமூகக் கட்டமைப்பாளர்களாக விளங்கும் ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஒரு மதத்தையோ, நம்பிக்கையையோ அதி தீவிரமாக வலியுறுத்தல் முரண்பாடுகளுக்கும் பிரிவினைகளுக்கும் வழிவகுக்கும்.

தொடரும்............

# உறவை மலரச் செய்யும் மாண்புகள்



ஹாய் ப்ரண்ட்ஸ்!

எம் உறவுகளை வளர்த்துக் கொள்ள பல கோணங்களில் ஆறுகளாக பாய்ந்து வரும் நற்பண்புகளுடன் சங்கமித்து தேடல்கள் செய்து உறவுகளை காண்போமா?

மனிதனை மனிதனாக ஏற்றுக் கொண்டு உயர்வு தாழ்வின்றி பெரியோர், சிறியோர் இன மத மொழி பேதமின்றி இறைவன் தந்த இலவசமானதும் அற்புமானதுமான கொடை 'புன்னகை' இதன் வழியாக அனைவரையும் ஈர்த்துக் கொள்வோம்.

நண்பனா? பகைவனா? நல்லெண்ணத்துடனும் உற்சாகத்துடனும் ஒருவர் ஒருவரிடமுள்ள நற்செயல்களையும் வாழ்வையும் கண்டால் உளமார வாழத்துவோம். அதுவே உள்ளத்தில் பதியும் உண்மை வாழ்த்தாகும்.

ஒருவரிடம் உள்ள முயற்சிகளை காணும்போதெல்லாம் உற்சாகப்படுத்தி தட்டிக் கொடுத்து உதவி செய்து அவர்களின் முயற்சியில் ஏணியாக செயற்படும்போது அவர்கள் வாழ்வில் எதிர்கால ஒளியைக் காண்பார்கள்.

குறைநிறைகளைக் கண்டால் பண்பாக விளக்கம் கொடுத்துப் பாராட்டுவோம். வாழ்வில் வரும் நல்ல நாட்களை நினைவுபடுத்தி பரிசு கொடுத்திருங்கள். ஒருவர் பேசும்போதோ அல்லது செயற்படும்போதோ அவர்களின் கருத்துக்களையும் உணர்வுகளையும் தேவைகளையும் செவிமடுக்கும்போது அவர்களிடத்தில் நல் மதிப்பு பெறுவோம்.

நல்ல தொடுதல்கள் ஆற்றுப்படுத்தும் அமைதியை கொடுக்கின்றது. இதன் வழியாக உறவுகள் ஆழப்படுத்தப்படும். சுமைகளும் சுகமாகின்றது. உறவுகளை வளர்க்க நேரம் அவசியமாகின்றது. ஒருவர் ஒருவருடைய தேவைக்காகவும் ஆறுதலுக்காகவும் நேரங்களை செலவு செய்யுங்கள். அவர்கள் வளம்பெற்று மனநிறைவு கொண்டு மகிழ்ந்திருப்பார்கள்.

கசப்பான நேரங்களில் உங்களை நாடுபவர் மகிழ்ச்சியான நேரங்களில் உங்களை உள்ளத்தால் வாழ்த்துவர். இது நாமாகக் கண்ட புதிர் அல்ல இதுவும் நம் கிறிஸ்துவின் வாழ்க்கையே!

மனம் விட்டு பேசுங்கள் மனந்திறந்து பேசுங்கள், சந்தேகங்கள் தீரும், உண்மைகளும் நன்மைகளும் தோன்றும். மதிப்பும் பெற்று ஆறுதல்களும் கிடைக்கும்.

ஆலோசனை செய்யுங்கள், அவசரப்படாதீர்கள். மன்னித்துப் பாருங்கள், மன்னிப்பது எவ்வளவு அவசியமானது என்பதை உணர்வீர்கள். அதுவே வாழ்வை மாற்றும், தாழ்வினைப் போக்கும். வாழ்வை வளம் பெறச் செய்யும். உண்மைகள் தெளிவுறும். உன்னை படைத்தவரை காண்பாய். மனிதர் மத்தியில் மதிப்பும் பெற்றிடுவாய்.

மனிதமே என்றும் எப்போதும் இறைவேண்டலில் கருத்தாய் இரு.

உறவை கிழிக்கும் முட்கள்

- ❖ அன்புக்கும் நட்புக்கும் இடையே கணக்குப் பார்க்காதே.
- ❖ அதிகமான எதிர்பார்ப்புக்கள்.
- ❖ மற்றவர் முன் ஆலோசனை செய்வது.
- ❖ ஆதிக்கம் செய்தல்.
- ❖ குறை கூறுதல்.
- ❖ முக்கியமான நாட்களை மறத்தல்.

நன்றி - சுபாஷினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தில் பொறுப்புணர்வு

## பிள்ளைகள் மற்றும் திருமணத்தின் மட்டில் நெறிமுறைகளின் பூரணத்துவம்

அருட். சகோ . எமர்சன் றாகல்
மெய்யியல் பீடம்,
தேசிய குருமடம்

சென்ற இதழ் தொடர்ச்சி...

இன்றைய சூழ்நிலையை பார்க்கையில் தொலைத்தொடர்பு சாதனங்களின் துரித வளர்ச்சியினால் அயல்வீட்டாரும் அன்னியராகிவிட்டனர்.. பல மைல் தொலைவில் இருக்கும் பல முகங்களை தெரியும் எமக்கு அயல் வீட்டாரின் முகங்களைத் தெரிவதில்லை. சில குடும்பங்களில் பிள்ளைகளை வளர்க்கும்போது கூட அயலாருடன் பழகும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது அரிதாகவே உள்ளது. ஆகவே பிள்ளைகளின் நல்வாழ்வு நோக்கிய பயணத்தில் சமூகத்துடன் ஒன்றித்து வாழ்வது எப்படி என்பது என பாடசாலைக் கல்வியுடன், அனுபவக் கல்வியாகப் புகட்டுவது அவசியமாகும். சமூகத்தில் காணப்படுகின்ற நன்மைகளையும் தீமையையும் அறிந்து செயற்படுவது எப்படி என கற்பித்துக் கொடுப்பதும் சமூகத்தில் உள்ள பெரியவர்களில் இருந்து நல்விடயங்களை கற்றுக் கொள்வது எப்படி எனவும் அறிவூட்டுவதும் குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவருடைய பொறுப்பாகும்.

ஆகவே எங்கள் ஒவ்வொருவருடைய குடும்பங்களிலும் பிறர் குடும்பங்களுடன் சேர்ந்து கூட்டுறவு குடும்பங்களாக (Co - Operative Families) திகழ்வது சமூகத்தில் நாம் பெற்ற அழைப்பாகும்.

### IV நம்பகத்தன்மை

நம்பகத்தன்மை, நம்பிக்கை என இருமுறையில் நாம் இத் தலைப்பை ஆராய்வோம். நம்பகத்தன்மை என நோக்குகையில் குடும்ப உறவுகளுக்கிடையில் இருக்க வேண்டிய அடிப்படையான பண்பு எனக் கூறலாம். காரணம், நம்பகத்தன்மை மாத்திரமே மற்றைய எல்லா பண்புகளுக்கும் அடிப்படையாகும். கணவன் மற்றும் மனைவிக்கு இடையேயும், சகோதர சகோதரிகளுக்கிடையேயும் காணப்படும் நம்பகத்தன்மையின் உறுதி நல்வாழ்வுக்கு வழிகாட்டும். நம்பகத்தன்மைக்கு எப்பொழுதும் எதிரியாக இருப்பது சந்தேகம். சந்தேகம் எனும் கிருமி குடும்பங்களில் நுழைந்துவிட்டால் அமைதி, சந்தோசம், பாசம் என எல்லாம் அடியோடு இல்லாமல் போய்விடும். எனவே குடும்ப அங்கத்தவர்கள் தம்முடைய அன்றாட வாழ்வில் நம்பகத்தன்மையை மற்றவர்களுக்கு அளிப்பவர்களாக இருக்க வேண்டும். 'சிறிய பொறுப்புக்களில் நம்பிக்கைக்கு உரியவராய்' (மத் 25:23) நாம் இருக்க பழக வேண்டும். பணமாக இருப்பினும். சிறு கடமைகளாக இருப்பினும், சிறிய வேலைகளாக இருப்பினும் நம்பிக்கைக்கு உரியவர்களாக குடும்பத்தில் இருக்க வேண்டும். குடும்பத்தில் இப்பண்பை கற்றுக் கொண்டால் சமுதாயத்தில் கூட எம்மால் நம்பிக்கைக்கு உரியவர்களாய் திகழ முடியும். நம்பகத்தன்மையிலும் கூட ஒரு பிரதிகூலம் இருக்கிறது. அதீத நம்பிக்கை: பிள்ளைகளை அதிகம் நம்புவதும் ஆபத்தை கொணரும் காரியம் தான். ஏனெனில் பிள்ளைகளின் நடத்தையில், அவர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காக சிறிதளவு ஐயமும் பெற்றோருக்கு தேவை. எனவே, இவ்விடயத்தில் சமநிலையயை காப்பது, பெற்றோர் அவதானத்துடன் செய்ய வேண்டிய காரியமாகும். நிதானத்துடன் முடிவுகளை எடுப்பது அறிவுள்ள ஒரு செயலாகும்.

நம்பிக்கை என நாம் கூறுகையில் பெரிதும் எமது கருத்தில் கொணர்வது ஒரு குடும்ப அங்கத்தவர் என்ற முறையிலும், குடும்பம் என்ற முறையிலும் இறைவனிடம் கொள்ளும் நம்பிக்கை ஆகும். கிறிஸ்தவ குடும்பங்கள் என்ற ரீதியில் குடும்பங்களில் நாம் இறைவனுடன் வாழும் போது இறைநம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறோம். எனவே, கானாவூர் திருமண குடும்பத்தில் நடைபெற்ற அதிசயம் போல எம் குடும்பங்களிலும் நிச்சயமாக அதிசயங்கள் இடம்பெறும். மரியன்னையின் பரிந்துரை உள்ள எல்லாக் குடும்பங்களிலும் அமைதி நிலவும். இதுவே எமது நம்பிக்கை.

எனவே குடும்பங்களில் மனித நேயப் பண்புகளும், கிறிஸ்தவ விழுமியங்களும், அன்பும் பொறுப்புணர்வும், தளராத பிணைப்பும், திடமான அறிவும் நிலவினால் அமைதியையும் பூரணமான குடும்பத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடரும்........................


---

# பேராயர் ஆஸ்கார் ரொமேரோ

சென்ற இதழ் தொடர்ச்சி ..........

**13. இரண்டாம் வத்திக்கான் சங்கமும் ரொமெரோவும்**

ரொமேரோவுக்கு ஒரு சிரமம் இருந்தது. அது என்னவென்றால் 1960களிலும் 1970களின் துவக்கத்திலும் இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையை சற்று உலுக்கியது. மத்திய அமெரிக்காவில் இதன் தாக்கம் அதிகமாயிருந்தது.



இதுவரைக்கும் திருச்சபை உறுதியான பாறையாக இருந்தது. 2000 ஆண்டுகள் தன்னை பாதுகாத்துவிட்டது. ஒரு பழமைவாத குருவாக ரொமெரோ அத்தகைய கருத்தியல் மற்றும் நிறுவன அமைப்பைக் கொண்ட திருச்சபையைத்தான் தனதாக்கிக் கொண்டிருந்தார்.

தான் சுவீகரித்துக் கொண்ட இந்தப் பழமையான பாறை போன்று உறுதியான திருச்சபையின் உறுப்பினராக இருப்பதில் பெருமிதம் கொண்டார். ஆனால் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு இளம் குருக்களுக்கு கிடைத்த சுதந்திரம் இவருக்கு சற்று நெருடலாக இருந்தது. இளம் குருக்கள் இவரைக் கண்டிப்பானவராகக் கருதினர்.

இரண்டாம் வத்திக்கான் சங்க கொள்கைகளை ரொமேரோ உள்வாங்கிக் கொள்ளவில்லை என்றே எண்ணினர். மேலும் ரொமேரோ பல அதிகாரம் கொண்ட பொறுப்பில் இருந்தது பிறருக்கு உறுத்தலாக இருந்தது. பேராலய குரு, பத்திரிகை ஆசிரியர், குருமட அதிபர் என்ற பொறுப்புக்களிலிருந்து இவர் மாறினால் நல்லது என்றே நினைத்தனர்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பு இந்த உணர்வுகள் ஏற்பட்டிருந்தால் அதைவெறும் முனங்கலாகவே செய்ய முடியும். ஆனால் இரண்டாம் வத்திக்கான் சங்கம் கொடுத்த சுதந்திரம் இந்த உணர்வுகளுக்கு வடிவம் கொடுத்து வெளிப்படுத்த உதவியது.

எனவே இவர் சான் மிகுவேலை விட்டு வெளியேறினால் நல்லது என்ற உணர்வு மேலோங்கியது. இச்சூழலில் 1967இல் புதிய ஆயர் பொறுப்பேற்கிறார். ரொமேரோ தேசிய ஆயர் பேரவை செயலாளராக சான் சால்வதோருக்குச் செல்கிறார்.

பழமை வாதிகளின் கை இப்போது மேலோங்கியது. முற்போக்கு சிந்தனை மற்றும் இடதுசாரி சிந்தனை கொண்ட குருக்களை ஆளும் வர்க்கத்தினர் கம்யூனிஸ்ட்டுகள் என்றே அழைத்தனர்.

14. மெடலினும் ரொமெரோவும்

1968இல் ஆயர் பேரவை கொலம்பியாவின் மெடலின் பகுதியில் கூடிய போது இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனைகளை செயல்படுத்த அழைப்பு விடுத்தனர்.

மத்திய அமெரிக்காவின் 300 மில்லியன் மக்களின் வாழ்க்கை நிலை குறித்து சிந்தித்தனர். 'அநீதி கடவுளின் திட்டம் அல்ல' என்று அறைகூவலிட்டனர். இதுவே விடுதலை இறையியலின் தொடக்கமாக இருந்தது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினரின் பரந்து பட்ட விளக்கங்கள் மெதுவாக அரசியல் ஈடுபாட்டிற்கு வித்திட்டது. அரசு ஆளுகையின் அநீதிகள் எதிர்க்கப்பட்டன. மெடலின் கருத்துக்களுக்கு ஆதரவான குரு என்றும் இதற்கு எதிரான பழமைவாத குரு என்றும் சிந்திக்கவும் செயல்படவும் துவங்கினர்.

**15. தகுதியைச் சோதித்தார் ரொமேரோ**

முற்போக்கு, பழமைவாதம் என்ற சூழலில் சான் சால்வதோரின் துணை ஆயராக ரொமெரோ திருநிலைப்படுத்தப்பட்டார்.

திருநிலைப்படுத்துவதற்கு முன்பு ஆயர் நிலைக்கு அவர் தகுதி உடையவரா அதற்குரிய தரமான ஆன்மீக வாழ்வு வாழ முடியுமா என்ற சிந்தனைகள் மற்றும் கேள்விகள் அவரைக் குழப்பின. இருப்பினும் அவர் ஆயர் நிலையை ஏற்றுக் கொண்டார். இந்த அழைப்பு கடவுளிடமிருந்து வந்தது என நம்பினார்.

அவர் மறைசாட்சியாகக் கொல்லப்படுவார் என்பது அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அது தெரிந்திருந்தால் ஆயர் நிலையை மறுத்திருப்பாரோ!

ஆனால் நம்பிக்கை ஒன்றுதான். இறைத்திட்டம் அவர் மறைசாட்சியாக உயிர்த்தியாகம் செய்ய வேண்டும் என அவர் தெரிந்திருந்தாலும் ஆயர் நிலை என்ற முடிவையே எடுத்திருப்பார். அவர் முடிவை மாற்றியிருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் அவர் சிலுவை பற்றியும் சிலுவைப்பாதை பற்றியும் தியானித்தவர். கல்வாரிப் பாதை தான் தனது பாதை என நம்பியவர். தச்சுத் தொழிலை விட்டு இயேசுவை பின்பற்றியவர் என்பது நமக்குத் தெரியும். 1970ஆம் ஆண்ட யூன் 21இல் அவர் சான் சால்வதோரின் உதவி ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இது அவரது பணிவாழ்வின் மகுடமான நேரம். அவர் லொயோலாவின் ஆன்மீக வழியில் திருநிலைக் கொண்டாட்டங்கள் எளிமையாக இருக்க விரும்பினார். பெரும் கொண்டாட்டங்களிடையே வலம் வருவது அவரது எளிய ஆன்மீகத்திற்கு எதிரானது என நம்பினார்.

தொடரும்.........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மறைமாவட்டத்தின் பிறப்பும், வளர்ச்சியும்

## (மறைமாவட்ட உருவாக்கத்தின் 125வது வருடப்பூர்த்தி யூபிலி விழா 25.08.1893 – 25.08.2018)

**தொடக்கவுரை:**

25.08.2018 அன்று திருகோணமலை மறைமாவட்டமானது தனது உருவாக்கத்தின் 125வது ஆண்டு நிறைவு யூபிலி விழாவினைக் கொண்டாடுகின்றது. 25.08.1893ஆம் ஆண்டு அன்றைய திருத்தந்தை 13ஆம் லீயோவால் திருகோணமலை மறைமாவட்டமானது இலங்கையின் ஐந்தாவது மறைமாவட்டமாக அறிவிக்கப்பட்டது. இன்றைய திருகோணமலை மறைமாவட்டமானது திருகோணமலை நிர்வாக மாவட்டத்தை உள்ளடக்கிய 2896 சதுரகிலோ மீற்றர் பரப்பில் இயங்கி வருகின்றது. இதன் எல்லைகளாக வடக்கே புல்மோட்டையும் தெற்கே வெருகலும் மேற்கே அக்போபுர பிரதேசமும் கிழக்கே வங்களா விரிகுடாவுடன் கூடிய இந்து சமுத்திரமும் காணப்படுகின்றது.

**வரலாற்று அறிமுகம்:**

1549ஆம் ஆண்டளவில் கண்டி மன்னனின் உறவினனாகிய, அவரது அரசவையிலிருந்த மட்டக்களப்பின் இளவரசனுக்கு பிரான்சிஸ்கன் துறவற சபையைச் சார்ந்த கத்தோலிக்க மதகுருவாகிய அருட்பணி சைமன் டீ கொய்ம்பரா (Fr. Simon de Coimbra) என்பவர் கத்தோலிக்க நெறியினை போதித்தார். 1549ம் ஆண்டு இலங்கை மட்டக்களப்பில் தரையிறங்கிய போர்த்துக்கேய கடற்பயண மாலுமி மோனிஸ் பரேட்டோ (Monis Bareto), படை வீரர்கள் மற்றும் அவர்களோடு கூடவே ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்ற வருகைதந்த பிரான்சிஸ்கன் சபைத் துறவியர்கள் தங்களது வருகையினை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு இளவரசனுக்கும், வன்னியார்ச்சிக்கும் அவரது இரண்டு பிள்ளைகளுக்கும், குடும்பத்தாருக்கும் திருமுழுக்கு அளித்தார்கள்.

1549 - 1552ற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் திருகோணமலையிருந்த இளம் இளவரசன் அவனது மாமனாருடனும், ஏனைய குறிப்பிடத்தக்க நாற்பது பேருடனும் மீன்பிடித் துறைமுக நகரில் (தூத்துக்குடி) அரசாட்சியில் ஏற்பட்ட சர்ச்சையின் காரணமாக தஞ்சமடைந்தான். அவ்வாறு தஞ்சமடைந்தவர்களை இயேசுசபையைச் சேர்ந்த அருட்பணி. ஹென்றி என்றிக்குஸ் (Fr. Henry Enriques SJ) சந்தித்து ஆறுதல் அளித்தார். அவரது பரிவான செயற்பாட்டினால் கவரப்பட்ட இளவரசனும், ஏனையவர்களும் தங்களுக்கு கத்தோலிக்க நெறியினை போதிக்குமாறு கேட்டுக்கொண்டு, போதனையைப் பெற்று கத்தோலிக்கர்களாக திருமுழுக்குப் பெற்றார்கள். இளவரசன் அலொன்சோ (Alonzo) எனும் பெயரினைப்பெற்று கோவாவின் கல்லூரியில் 'திருகோணமலையின் அரசன் டொன் அல்போன்சோ' (Don Alfonso, Rey de Trincomalee) எனும் பெயருடன் இணைக்கப்பட்டான்.

**ஒல்லாந்தர் ஆட்சியும், புனித ஜோசப் வாஸ் அடிகளாரும்**

ஒல்லாந்தரது கத்தோலிக்க எதிர்ப்பு கலாபனை ஆட்சிக்காலத்தில், பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் அருட்தந்தை ஜோசப் வாஸ் அடிகளார் கிழக்கு மாகாண பணித்தளங்களுக்கு பலதடவைகள் வருகை தந்துள்ளார். 1706ஆம் ஆண்டில் தம்முடன் பணியில் இணைந்து கொள்வதற்காக இந்தியாவின் கோவாவிலிருந்து மேலும் சில குருக்களை வருவித்துக் கொண்டார். அவ்வாறு வந்தவர்களுள் அருட்பணி ஜோசப் டீ மெனாசீஸ் (Fr. Joseph de Menezes) அடிகளாரை தமலகம் (தமலகம்), திருகோணமலை, கொட்டியார் (மூதூர்), மட்டக்களப்பு, தமன்கடவை மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் நியமித்தார். புனித ஜோசப் வாஸ் அடிகளாரின் மறைமாவட்டப் பணியோடு தொடர்புடைய வரலாற்று சான்றாக கொட்டியாரத்தில் (மூதூரில்) அவரது உடன் பணியாளராகிய அருட்தந்தை மிக்கேல் டீ மெல்லோ அடிகளாரின் அடக்கம் பண்ணப்பட்ட கல்லறை இன்றும் திகழ்கின்றது.

**புதிய மறைமாவட்டத்தின் உருவாக்கம்**

வரலாற்றுத் தரவுகளின்படி 1834ஆம் ஆண்டிலே திருத்தந்தை 15ஆம் கிரகோரியார் இலங்கையை தனித்த திருத்தூது (அப்போஸ்தலிக்க) நிர்வாகப் பிரிவாக ஏற்படுத்தினார். ஆகஸ்ட் 13ஆம் நாள், 1849இல் பேரருட்திரு பெற்றாக்கினி (Msgr. Bettachini) ஆண்டகை அவர்கள் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராக ஏற்படுத்தப்பட்டார். அதனால் இலங்கைத் திருச்சபையானது கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் என்கின்ற இரண்டு மறைமாவட்டப் பிரிவுகளாக ஏற்படுத்தப்பட்டது.

அவ்வேளையிலே யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் பதினொரு மறைபரப்புப் பணியாளர்கள் (Missionaries) பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இந்தப் பதினொரு மறைப்பணியாளர்களும் மறைமாவட்டத்தின் பத்து பிரதான மையங்களிலும் அதனோடிணைந்த பகுதிகளிலும் பணியாற்றினார்கள். அவ்விடங்கள் முறையே, யாழ்ப்பாணம், வலிகாமம், ஊர்காவற்துறை, மன்னார், மாந்தை (மாந்தோட்டம்), கற்பிட்டி, சிலாபம், பருத்தித்துறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு என்பனவாகும்.

**புதிய மறைமாவட்டத்தின் முதல் ஆயர்**

புதிய திருகோணமலை மறைமாவட்டத்தின் முதல் ஆயராக பேரருட்திரு சாள்ஸ் லவிஞ்சே, இயேசுசபை (Msgr. Charles Lavigne, SJ) 1898ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார். இவர் அப்பணிக்கென நியமிக்கப்படும்போது இந்தியாவிலுள்ள கேரளாவின் கோட்டயம் மறைமாவட்டத்தின் ஆயராக பணியாற்றிக் கொண்டிருந்தார். இவரது வருகைக்கு முன்னதாக 1893இல் மறைமாவட்டம் உருவாக்கப்பட்டபோது அப்போதைய யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஆயராகவிருந்து பேரருட்திரு யூலைன் (Msgr. Joulain, OMI) ஆண்டகை அவர்கள் 1895ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரையிலும் மறைமாவட்டத்தின் பரிபாலகராக கடமையாற்றினார். அவரைத்தொடர்ந்து 1895ஆம் ஆண்டு தொடங்கி புதிய முதல் ஆயர் பொறுப்பேற்கும் வரையிலும் அன்றைய காலி மறைமாவட்டத்தின் முதல் ஆயராக நியமிக்கப்பட்ட பேரருட்திரு ஜோசப் வன் ரீத் ஆண்டகை (Msgr. Joseph Van Reeth) அவர்கள் பரிபாலகராக கடமையாற்றினார்.

பிரான்ஸ் நாட்டின் சம்பகேன் மாநில முதல் மூன்று இயேசுசபைத் துறவிகள் 1895ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் வருகை தந்தார்கள். அவர்கள் மூவரும் முறையே அருட்தந்தையர்கள் கபிரியேல் மொறீல், அல்போன்ஸ் மேரி எவ்றாட் மற்றும் பிரான்சீஸ் சேவியர் ஹெய்ம்பேகர் (Frs. Gabriel Moreel, Alphonse Mary Evrard and Francis Xavier Hiemburger) ஆவர். இவர்கள் தங்களது பணியினை மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் ஆரம்பித்தார்கள். இவர்கள் ஆரம்பித்த இப்புதிய மறைப்பணியில் அனைத்துமே ஒழுங்கு செய்யப்பட வேண்டியிருந்தது. இக்காலப் பகுதியிலே தங்களையே ஒன்றிணைத்துக்கொண்டு தாங்கள் பெற்றுக்கொண்ட படிப்படியான அனுபவத்தின் வாயிலாக, எங்கெல்லாம் தேவையுண்டோ அங்கெல்லாம் தங்களிடமுள்ள வளத்தினை பயன்படுத்தி பணியாற்றத் தொடங்கினார்கள்.

1895ஆம் ஆண்டிலே கடைசியாக மறைமாவட்டத்தில் பணியாற்றி விட்டுச்சென்ற அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களின் கணக்கெடுப்பின் பிரகாரம் மறைமாவட்டத்தில் அண்ணளவாக 4,000 கத்தோலிக்கரும், 10 ஆலயங்கள் மற்றும் சிற்றாலயங்களும், 750 மாணவர்களுடன் 20 பாடசாலைகளும் காணப்பட்டன என்று குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

1911ஆம் மற்றும் 1921ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட உத்தியோக பூர்வமான அரச கணக்கெடுப்பின் பிரகாரம் திருகோணமலை மறைமாவட்டத்தின் அன்றைய சனத்தொகை முறையே: 190,367 மற்றும் 201,057 ஆகும். இதிலே மட்டக்களப்பு மாவட்டத்தில் (இன்றைய அம்பாறை மாவட்டமும் உள்ளடங்கலாக) 158,709 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 34,112 பேரும், தமன்கடவை (பொலன்நறுவை) மாவட்டத்தில் 8,236 பேரும் காணப்பட்டனர்.

இன ரீதியாக தமிழர்கள் 105,183 பேரும், முஸ்லீம்கள் 79,720 பேரும், சிங்களவர்கள் 10,805 பேரும், பறங்கியர்கள் 5,173 பேரும், ஏனையவர்கள் 64 பேரும் காணப்பட்டனர். சமய ரீதியாக இந்துக்கள் 99,747 பேரும், இஸ்லாமியர்கள் 79,831 பேரும், பௌத்தர்கள் 10,482 பேரும், கிறிஸ்தவர்கள் 10,032 பேரும், ஏனையவர்கள் 65 பேரும் காணப்பட்டார்கள்.

அன்றைய மறைமாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பானது 5,048 சதுர மைல்களாகும். இது இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதியினையும்விட சற்றுக் கூடுதலாகும். மறைமாவட்டமானது மறைபரப்புப் பணியில் நீள, அகலப் பரப்பில் மிக நீண்ட பிரதேசமாகும். ஆயினும் மக்கள் சனத்தொகையில் மிகச் சிறியதாகும்.

**பேரருட்திரு சாள்ஸ் லவிஞ்சே, (இயேசுசபை) ஆண்டகை**

புதிய திருகோணமலை மறைமாவட்டத்தின் முதல் ஆயராகப் 1898இல் பொறுப்பேற்று 1913ஆம் ஆண்டு வரையிலும் பணியாற்றினார். இவர் பிரான்ஸ் நாட்டைச் சார்ந்தவர். இவரது காலப்பகுதியில் மறைமாவட்டத்தில் பல புதிய ஆலயங்களும், பாடசாலைகளும் உருவாக்கப்பட்டன. அவை மக்களை கல்வியிலும், நல்லொழுக்கப் பயிற்சியிலும் உருவாக்கப் பெரிதும் உதவி புரிந்தன. அவரது காலப் பகுதியில் நற்செய்திப் பணியானது பல பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டு பலருக்கும் அறிவிக்கப்பட்டது. இவர் தனது 73வது வயதில் தனது சொந்த நாடாகிய பிரான்ஸில் காலமானார் இவர் நினைவாக மட்டக்களப்பு ஆலையடிச்சோலை சேமக்காலையில் நினைவுக் கல்லறையும், திருகோணமலை மரியாள் பேராலயத்தில் நினைவுப் படிகக்கல்லும் பொறிக்கப்பட்டுள்ளது.

**பேரருட்திரு கஷ்ரன் றொபிஷ்சே (இயேசுசபை) ஆண்டகை**

இவர் திருகோணமலை மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராவார். இவர் பிரான்ஸ் நாட்டைச் சார்ந்தவர். இவர் மறைமாவட்டத்தின் ஆயராக 1917ஆம் ஆண்டு தொடக்கம் 1946ஆம் ஆண்டு வரையிலும் கடமையாற்றினார். இவரது நீண்ட காலப் பணியில் மறைமாவட்ட சுதேச தேவ அழைத்தல்கள் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டன. மறைமாவட்டத்தின் கிராமப் பகுதிகளை நோக்கி மறைபரப்புப்பணி முயற்சிகளை ஊக்குவித்ததுடன் அதற்காக பெரிதும் பாடுபட்டு உழைத்தார். இவர் 13.02.1946இல் மட்டக்களப்பில் காலமானார். அவரது திருவுடல் இன்றைய மட்டக்களப்பு மறைமாவட்ட புனித மரியாள் பேராலயத்தில் அடக்கம் பண்ணப்பட்டுள்ளது.

**பேரருட்திரு இக்னேஷியஸ் கிளேனி (இயேசுசபை) ஆண்டகை**

இவர் திருகோணமலை மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயராவார். இவர் ஆயரானபோது மறைமாவட்டமானது பிரான்ஸ் நாட்டு சம்பகேன் மாநில இயேசுசபை துறவிகளிடமிருந்து ஐக்கிய அமெரிக்க நாட்டு நியு ஓர்லியன்ஸ் மாநில இயேசுசபையினரிடம் (Jesuits of the New Orleans Province) ஒப்படைக்கப்பட்டது. இவர் மறைமாவட்டத்தின் ஆயராக 1947ஆம் ஆண்டு தொடக்கம் 1973ஆம் ஆண்டு வரையிலும் கடமையாற்றினார். இவர் தனது காலப் பகுதியில் மறைமாவட்ட சுதேச குருக்களின் உருவாக்கத்திற்காக பெரிதும் அயராது உழைத்தார். மறைமாவட்டத்திற்கென புதிதாக சிறிய குருமடத்தை உருவாக்கி உள்ளூர் அழைத்தல்களை ஊக்குவித்தார். இவரது இருபத்தியாறு வருட ஆயர் பணியின்போது இருபத்தியெட்டு மறைமாவட்ட குருக்களை உருவாக்கி திருநிலைப்படுத்தி சாதனை படைத்தார். இவர் சகல சமய மற்றும் இன மக்களாலும் பெரிதும் விரும்பி மதிக்கப்பட்டார். இவரது காலப் பகுதியான 26.10.1967இல் திருகோணமலை மறைமாவட்டமானது திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டமென புதிய பெயர்சூடி அழைக்கப்பட்டது. இவரது ஓய்வின் பிற்பாடு தனது சொந்த நாடாகிய அமெரிக்க நாட்டிற்கு சென்று அங்கு 27.04.1993இல் காலமானார்.

தொடர்ச்சி 10ம் பக்கத்தில்...........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறுக்கு வருந்துகிறோம்.

## திருப்பாலத்துவ சபை பங்குகளின் காணிக்கை - 2018

புனித அந்தோனியார், மூதூர்

33,000.00

திரு இருதய ஆண்டவர், இருதயபுரம்

**அருள்பணியாளர். D. அன்ரூ ஸ்டீபன்**
**நிதிப்பொறுப்பாளர்.**
**ஆயர் இல்லம்,**
**உவர்மலை, திருகோணமலை**






# தூய மாற்கு

# ஒத்தமை நற்செய்தி

சென்ற இதழ் தொடர்ச்சி ......

பிறகு மாற்கு 10:35-45 இல் செபதேயுவின் மக்கள் யாக்கோபுவும், யோவானும் இயேசுவின் வலப்பக்கமும், இடப்பக்கமும் அமர அருளுமாறு விண்ணப்பிக்கின்றார்கள். மத்தேயு 20:20 அவர்களின் தாய்தான் விண்ணப்பிக்கின்றார். ஆனால் மத்தேயுவில் இயேசு மாற்கு நற்செய்தியில் வருகின்ற படியே பதில் அளிக்கின்றார். "நீங்கள் என்ன கேட்கின்றீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை" (மத் 20:22). மத்தேயுபடி தாய் விண்ணப்பித்திருந்தாலும் மாற்கில் வருவது போன்றே பதில் பன்மையில் வருகின்றது. இதிலிருந்து மத்தேயு மாற்கிலிருந்து சிலவற்றைப் பெற்று சில நேரம் மாற்றி அமைத்துள்ளார். சிலநேரம் அப்படியே தந்துள்ளார் என்பது புலனாகிறது.

இது தவிர உள்ளடக்கம், பாணி, இறையியல் நோக்கு ஆகிய அடிப்படைகளில் பார்த்தாலும் மாற்கு நற்செய்தி முதலில் எழுதப்பட்டுள்ளது போல் தெரிகிறது. மாற்கு நற்செய்தியில் ஆற்றொழுக்கமான நடையில்லை. பல சொற்றொடர்கள் கரடுமுரடானவை. அவை மத்தேயுவிலும் லூக்காவிலும் மென்மைப்படுத்தப்பட்டுள்ளன என்பது புலனாகிறது.

மாற்கு நற்செய்தியில் அரமேயச் சொற்கள் வருகின்றன. எடுத்துக்காட்டாக தலிதாகூம் (மாற்கு 5:41), எபேத்தா (மாற்கு 7:34). அவை மத்தேயுவிலும் லூக்காவிலும் மேன்மைப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்கு நற்செய்தியில் பழைய ஏற்பாட்டு சொற்றொடர்களை மேற்கோள் காட்டுவதில் சில தவறுகள் உள்ளன. மத்தேயு, லூக்காவில் அவை திருத்தப்பட்டுள்ளன. மாற்குவில் எசாயாவிலிருந்து எடுக்கப்பட்டதாக இரு மேற்கோள்கள் வருகின்றன. ஆனால் அவற்றில் ஒன்று மலாக்கியாவிலிருந்து எடுக்கப்பட்டது. "இதோ என் தூதனை உமக்கு முன் அனுப்புகிறேன். அவர் உமக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார். அவருக்காக பாதையை செம்மையாக்குங்கள் என்று இறைவாக்கினர் எசாயாவின் நூலில் எழுதப்பட்டுள்ளது" என மாற்கு குறிப்பிட்டாலும் முதல் பகுதி எசாயாவிலிருந்து எடுக்கப்பட்டதன்று. மத்தேயுவும் லூக்காவும் மலாக்கியாவிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோளை விட்டு விட்டு எசாயாவிலிருந்து எடுக்கப்பட்டதை மட்டுமே தருகின்றனர்.

பிறகு மாற்கு 2:26இல் அபியத்தார் தலைமை குருவாய் இருந்ததாகவும் அவர் தாவீதும் அவரோடு இருந்தவர்களும் உண்ண இறை இல்லத்திலிருந்து அப்பம் எடுத்துக் கொடுத்ததாகவும் வருகிறது. ஆனால் 1சாமுவேல் 21:1-9இன் படி அப்போது தலைமை குருவாக இருந்தவர் அகிமெலேக் என்பவர் ஆவார். மத்தேயுவும் மாற்குவும் இத்தகவலை விட்டு விடுகின்றனர்.

மேற்கூறிய காரணங்களால் மத்தேயுவிற்கும் லூக்காவிற்கும் முன்பே மாற்கு நற்செய்தி இருந்தது என்பதும் மற்ற இருவரும் மாற்கிலிருந்து பல பகுதிகளைப் பெற்று சிலவற்றை மாற்றி அமைத்துள்ளனர் என்றும் புலனாகிறது.

தொடரும்......... நன்றி ~ விவிலிய விருந்து

## ஞானப்பெற்றோரின் முக்கியத்துவமும் ஞானம் பற்றிய தெளிவான சிந்தனையும்



**அருட் சகோ. எமர்சன் றாகல்,**
**மெய்யியல் பீடம்**
**தேசிய குருமடம்.**
**கண்டி**

இவ்வகையாக சட்டரீதியாக நிபந்தனைகள் இருந்த போதிலும் இக்கால சூழ்நிலையில் ஞானப்பெற்றோரின் கடமைகள் அவர்களின் பங்களிப்பு என்பவற்றை கருத்தில் கொள்கையில், ஞானத்தை வளர்க்கக் கூடிய முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாகத் திகழ்கின்றனரா என்று கவனத்தில் கொள்ள வேண்டும். கிறிஸ்தவ அடிப்படை விசுவாச உண்மைகளை அறிந்தவராகவும் திகழ வேண்டும். தன்னுடைய ஞானக்குழந்தைகளுக்கு முன்மாதிரிகையான கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும். ஆனால் இன்றைய சூழ்நிலையில், சுய மதிப்புக்காகவும் உறவினர்களின் வேண்டுகோளுக்காகவும், சலுகைகளுக்காகவும் ஞானப்பெற்றோரை தேர்ந்தெடுக்கின்ற பழக்கம் சில கிறிஸ்தவ குடும்பங்களில் காணப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் ஞானப்பெற்றோர் வெளிநாடுகளில் வாழ்ந்தவர்களாகக் கூட இருக்கின்றனர். எனவே, நாம் சரியான நபர்களை ஞானப்பெற்றோராக தேர்ந்தெடுக்கவில்லை என்றால் பிரதிகூலங்களை அனுபவிப்பது எமது எதிர்கால கிறிஸ்தவ சமூதாயமே, எம்மில் ஞானப்பெற்றோராக திகழ்பவர்களும் நாம் பெற்றுக் கொண்ட உன்னத பொறுப்பை நிறைவேற்றுகின்றோமா என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆகவே, திருச்சபை ஞானப்பெற்றோரின் அவசியத்தை அறிந்து அவர்களின் பணி எதிர்கால கிறிஸ்தவ சமூதாயத்திற்கு தேவையானதொன்றாக இருக்கிறது, என வலியுறுத்துகிறது. ஞானப்பிள்ளைகளின் ஆன்மீக வளர்ச்சியிலும், ஆன்மீக உறவிலும் ஞானப்பெற்றோர் பங்குகொள்ள வேண்டும் எனவும் திருச்சபை வேண்டுகோள் விடுக்கிறது.

### II. ஞானப்பெற்றோரும் - ஞானமும்

ஞானப்பெற்றோரை பற்றி நாம் ஆராயும் போது அவர்களிடம் காணப்பட வேண்டிய அடிப்படையான தகைமை 'ஞானம்' எனும் கொடையேயாகும். "ஞானம்" என்பதை பற்றி சிந்திக்கையில் சமூக மெய்யியல் பார்வையிலும் இறையியல் பார்வையிலும் அலசி ஆராய்ந்து பார்ப்போம். இவ்விரு கோணத்திலும் வேறுபட்ட கருத்துக்களை வலியுறுத்தி நின்ற போதிலும், சமூகத்துடன் உறவாடும் சாதாரண மனிதர்களாகிய நாம் " சமூக ரீதியான ஞானம்", "ஆன்மீக ரீதியான ஞானம்" என இருவகையும் அறிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

### 01. மெய்யியல் பார்வையில் ஞானம்

மெய்யியல் ( Philosophy) என்று நாம் வரைவிலக்கணம் கூறும்பொழுது பொதுவாக ஞானத்திற்கான தேடல்' அல்லது ' ஞானத்தின் மேல் உள்ள அன்பு' எனக் கூறுவோம் (Search of Wisdom / Love of Wisdom). எனவே, மெய்யியல் பார்வையில் ஞானம் என்று கூறும் போது நாம் விளங்கிக் கொள்வது என்னவெனில் "முறையான சிந்தனையும் அதனையொட்டிய செயற்பாடும்" ஆகும். இதைப்பற்றி நாம் மேலும் கலந்துரையாடுவோம்.

தொடரும்..................

சென்ற இதழின் தொடர்ச்சி....

# விவிலியம் ஒரு குடும்பக் காவியம்



## தலைமுறை தலைமுறையாய் பாவத்தில் உழல்வோமா?

## இல்லை அதை அறவே ஒழித்து, உண்மையில் உயர்வோமா?

ஆதிப் பெற்றோர் கட்டிய முதல் பாவம் அகம்பாவம். ஆசைக்கு ஆட்பட்டுக் கடவுளின் கட்டளையை மறுக்கத் துணிந்ததே அந்தப் பாவம். அதையும் அவர்கள் குடும்பமாகக் கட்டிக் கொண்டது பெரும் பரிதாபம்!

விளைவு! அதுவரை அந்தப் பெற்றோர் மகிழ்வோடு வாழ்ந்து வந்த இன்ப வனத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். ஆகவே அவர்கள் பெற்ற பிள்ளைகளோ. அவர்கள் ஈன்ற தலைமுறையினரோ அந்த இன்ப வனத்திற்குள் மீண்டும் நுழைய இயலாத சூழல்! இன்பவனத்தை இழந்ததால், தமக்குள்ளே பல மனக்குழப்பங்கள், தங்களுக்கிடையே பல தகராறுகள், இறை உறவிலே இடைவெளி, இயற்கையின் கோபதாபங்கள் மற்றும் கொந்தளிப்புக்கள்!! சுருங்கக் கூறின், ஆதிப்பெற்றோரின் தலைமுறையினர் அனைவருமே இயற்பொருள் சார் தீமைகள், அறநெறி சார் தீமைகள் ( Physical evil & Moral evil) ஆகிய அனைத்தையும் சந்திக்க நேர்ந்தது!

இதுவே வரலாற்று உண்மையும் கூட, மேற்சொன்ன இருவகைத் தீமைகளையும் அனுபவிக்காத குடும்பம் எதுவுமே இல்லை. மனித இனம் முழுவதும் தலைமுறை தலைமுறையாய் இந்தப் பாவச் சுமையை சுமந்து வந்துள்ளது என்பதே வரலாற்று உண்மை. இன்றும் நாம் அச்சுமைகளை சுமந்து கொண்டிருக்கிறோம். நவீன அறிவியல் தொழில்நுட்பம் எத்துணைதான் வளர்ந்தோங்கினாலும் இச்'சுமைகள் பின்வரும் நம் தலைமுறையினரையும் சென்றடைவது உறுதி!

ஈண்டு அறிவார்ந்த வினா ஒன்று எழுவதற்கான வாய்ப்பு உள்ளது. கடவுளின் கட்டளையைக் கீழ்ப்படியாததால் ஆதாமும் அவர் மனைவியும் இன்பவனத்தை இழந்தது நியாயம் தான். அவர்கள் இருவருமே கூடி மகிழ்ந்து பலுகிப் பெருகி, பாவமும் பாவம் சாபம் இல்லாத பெருவாழ்வை வாழ முடியாமல் போனதும் சரியே. அவர்கள் கட்டிக்கொண்ட அகம்பாவத்திற்குரிய தண்டணையை அவர்கள் பெற்றது முறையே! அவர்களின் தலைமுறையினர் கூட அந்த தண்டணையின் தாக்கத்தைப் பெற்றதைக் கூட சரியென ஒத்துக் கொள்ளலாம். பெற்றோர் சேமித்து வைத்த சொத்து சுகங்களை நாம் பெற்று மகிழ்வது போலவே அவர்கள் பெற்ற துக்க துயரங்களிலும் நாம் பங்கேற்பதுதான் பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையே உள்ள பிணைப்பு என்று கூட ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் கட்டிக் கொண்ட பாவச் சுமையை அவர்களின் பிள்ளைகளுக்கோ அல்லது தலைமுறைகளுக்கோ சார வைப்பது நியாயமாகுமா? பாவம் என்பது அவரவர் சொந்த இயல்புக்கேற்ப வேறுபடுவது. அது ஒரு அறநெறி சார்ந்த செயல். எனின் பெற்றோரின் பாவத்தை பிள்ளைகள் மேல் சுமத்தலாமா இது முறையாகுமா?

**நன்றி – விவிலிய விருந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை மறைமாவட்டம் குருக்களுக்கான புதிய இடமாற்றங்கள்

01 அருட்பணியாளர்.ரி. கிங்ஸ்லி றொபட்
மறைமாவட்ட குருமுதல்வர்
இயக்குனர்:- மறைக்கல்வி, திருவழிபாடு, பொதுநிலையினர்
02. அருட்பணியாளர் வி. ஜோர்ச் திசாநாயக்கா
பங்குத்தந்தை:- சீனன்குடா பங்கு
இயக்குனர்:- கிறீஸ்தவ ஒன்றிப்பு
03. அருட்பணியாளர் ஏ.ஏ. நவரெட்ணம்
இயக்குனர்:- சமூகத் தொடர்புகள்
04. அருட்பணியாளர் ஹெக்ரர் யூட் ஜோன்சன்
பங்குத்தந்தை:- இருதயப்புரப் பங்கு
ஆன்மீக இயக்குனர்:- புனித வின்சன் டி பவுல் சபை
05. அருட்பணியாளர் செ. சுகுனேந்திரன் குரூஸ்
பங்குத்தந்தை:- உவர்மலைப்பங்கு
06. அருட்பணியாளர் பி. போல் றொபின்சன்
பங்குத்தந்தை:- பேராலயப்பங்கு
இயக்குனர்:- விவிலிய அப்போஸ்தலிக்கம், அசிப்பா
பொறுப்பாளர் : மறைமாவட்ட யாட்
07. அருட்பணியாளர் எ.றொஹான் பேர்னாட்
இயக்குனர் : புனித சூசையப்பர் மேய்ப்புப்பணி நிலையம்.
இயக்குனர் : குடும்ப அப்போஸ்தலிக்கம்
08. அருட்பணியாளர் யோ. டன்ஸ்ரன் பிரட்றிக்
இயக்குனர் : எகெட் / கரிற்றாஸ் - திருகோணமலை
இயக்குனர் : பல்சமய உரையாடல்
பொறுப்பாளர் : ஆண்டாங்குளம் பணித்தளம்
09. அருட்பணியாளர் எஸ். சகாய ஜோன்பிள்ளை
மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளர்
பங்குத்தந்தை : தம்பலகாமப் பங்கு
இயக்குனர் : மறைமாவட்ட சொத்துக்கள்
10. அருட்பணியாளர் யூஜின் போல் ஜொனத்தன்
சிறப்புப்பணிக்குரு - இலண்டன்
11. அருட்பணியாளர் எக்ஸ். ஐ. ரஜீவன்
தலைவர் : புனித யோசேப் வாஸ் சிறிய குருமடம்
இயக்குனர் : திருப்பாலத்துவ சபை
இயக்குனர் : பீடப்பணியாளர்கள்
12. அருட்பணியாளர் க. நிதிதாசன்
பங்குத்தந்தை : பாலையூற்று திருத்தலம்
13. அருட்பணியாளர் செ. மதுராங்கன் குரூஸ்
பங்குத்தந்தை : இறைஇரக்கத் திருத்தலம்
இயக்குனர் : கத்தோலிக்க இளைஞர்
இயக்குனர் : அருங்கொடை இயக்கம்
14. அருட்பணியாளர் ஐ. யூட் சர்வானந்தன்
பங்குத்தந்தை : சாம்பல்தீவுப் பங்கு
சிறப்புப்பணிக்குரு : திருகோணமலை பல்கலைக்கழகம்
15. அருட்பணியாளர் எஸ். ஆர். ஜெயரெட்ணம்
பொறுப்பாளர் : மறைமாவட்ட பண்ணை
இயக்குனர் : கல்வி
16. அருட்பணியாளர் ஜே. சுதர்ஷன்
பங்குத்தந்தை : கன்னியாப் பங்கு
17. அருட்பணியாளர் டே. அன்ரூ ஸ்ரீபன்
பங்குத்தந்தை : நிலாவெளிப் பங்கு
18. அருட்பணியாளர் ப. றொய்சன் ஸ்பாக்ஸ்
பங்குத்தந்தை : செல்வநாயகபுரப் பங்கு
19. அருட்பணியாளர் W. D. இயேசு ரமேஸ் அ.ம.தி
பங்குத்தந்தை : குச்சவெளிப் பங்கு
20. அருட்பணியாளர் பா. ஜெயபாலன் அ.ம.தி
பங்குத்தந்தை : குவாடலூப்பே பங்கு
ஆன்மீக இயக்குனர் : மரியாயின் சேனை
21. அருட்பணியாளர் பி. ஜே. யோகராஜா அ.ம.தி
சிறப்புப்பணிக்குரு : வைத்தியசாலை, சிறைச்சாலை
22. அருட்பணியாளர் லக்ஸ்மன் பீரிஸ் இ.ச
பங்குத்தந்தை : கந்தளாய்ப் பங்கு
23. அருட்பணியாளர் அல்பிரட் விஜயகமலன் அ.ம.தி
அதிபர் : தி / புனித சூசையப்பர் கல்லூரி
24. அருட்பணியாளர் ஏ. செபஸ்ரியன் கப்புச்சின் சபை
பங்குத்தந்தை : மூதூர்ப் பங்கு

**Note : Chaplain (சிறப்புப் பணிக்குரு)**

தகவல் : ஆயர் இல்லம்
திருகோணமலை



## ஆழ்ந்த அனுதாபங்கள்

யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட அமரர் கத்தரின் பிலிப்பையா அவர்கள், 28.07.2018 அன்று இறைபதமடைந்தார்.

இவர் எமது மறைமாவட்டத்தில் பணியாற்றி வரும் அருட்பணியாளர் P. J. யோகராஜா அ.ம.தி அவர்களின் தாயார் ஆவார்.

இவரது ஆன்மா இறைவனில் இளைப்பாற 'திருமலைத்தீபம்' தனது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கிறது.

# இளையோர் திறன் உயர ....



சென்ற இதழ் தொடர்ச்சி ...............

**12. வெற்றியின் தேடல்**

டங்ஸ்டன் இழைகளிடையே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் தொமஸ் அல்வா எடிசனைப்பற்றிச் சொல்ல அறிமுகவுரை தேவையில்லை. வரலாற்றின் இருண்ட பக்கங்களில் கண்டுபிடிப்புக்களால் ஒளியேற்றியவர். பருந்தின் கண்களால், பாய்ச்சல் பார்வையால் நோக்கினால் கூட அவரின் படைப்பாக்கங்கள் அடர்த்தியாகத்தான் தெரியும். காலத்தின் கல்வெட்டுக்களில் பதிக்கப்பட்டுள்ள எடிசனின் ஆய்வகம் திடீரெனத் தீப்பற்றி எரிந்தது. பத்திரிகையாளர்கள் சுற்றி நின்று எடிசனிடம் கேட்டனர். எத்தனை கண்டுபிடிப்புக்கள் முடிவு தெரியாமல் அழிந்து போயுள்ளன? அத்தனையையும் மீண்டும் உருவாக்க முடியுமா? ஆய்வைத் தொடர உங்களுக்கு மனவலிமை இருக்கிறதா? எடிசனின் பதில்: ஆய்வகத்தில் எரிந்த போனது என் வெற்றிகள் மட்டுமல்ல. ஏராளமான தோல்விகளும்தான். இதைத்தான் வெற்றியின் தேடலாகப் பார்க்கின்றோம்.

அந்த வெற்றியின் தேடல் இளையோரின் இதயத்தசையில் ஒட்டிக்கொள்ள வேண்டுமென்ற ஏக்கம், தவிப்புதான் எழுத்துக்களாக. சொற்களாக வந்து விழுகின்றன. இளையோரின் இலக்கிற்கான தேடல், வெற்றியை முகவரி கொடுத்து அழைக்கும் எனலாம்.

குள்ளமாய் தடினமாய், நாகரீகமற்றவராய், வெளித்தோற்றத்திற்கு உலகத்தை வெறுப்பவராய், துயரங்களினால் அலைக்கழிக்கப்பட்டவராய், செவிட்டுத்தன்மையால் பாதிக்கப்பட்டவராய் வரலாற்றில் குறிப்பில் எழுதப்பட்டுள்ளவர். தம் வாழ்வில் 9 சிம்பொனிகள். 32 சொனாடாக்கள். வயலின் மற்றும் பியானோ கச்சேரிகள், பெரும் இசை நாடகங்கள், அறை இசைகள் என இசையுலகை ஆக்கிரமித்துள்ள பீத்தோவான் என்ற அந்த மாபெரும் கலைஞனின் செயல்களில் வேகம்தான் வெற்றியின் தேடலுக்கு மிகச் சரியான சான்று.

அறிதல், ஆய்தல், இணைதல், ஈடுபடுதல், உழைத்தல், ஊக்கப்படுதல், எழுச்சியூட்டல், ஏணியாதல், ஒத்துழைத்தல் எனப்பல தேவைகளில் துணைநிற்கும் நண்பர்களைத் தேர்ந்தெடுத்தலே பாதி வெற்றிக்குச் சமம்.

'எண்ணிக்கையில் குறைவான வயதுள்ளவர்களைத்தான் இந்தப் பிரபஞ்சம் மிக உயரத்தில் வைத்துள்ளது' என்ற பெர்னாட்ஷாவின் வரிகளை இங்குப் பதிவு செய்வது பொருத்தமானதாக அமையும். வெற்றிக்கான தேடலோடு இயங்கும்போது அத்தனை சாத்தியக் கூறுகளும் கைக்குள் வரும் என்பது கற்பூரச் சத்தியம். அந்த **நம்பிக்கையோடு இயங்குவோம் நம் இதயம் இயங்கும் வரை......!**

முற்றும் !
நன்றி

# புனித வின்சன் டீ பவுல் தேசிய விழாவில் திருகோணமலை மாணவிக்கு பரிசளிப்பு கௌரவம்

புனித வின்சன்ட் டீ பவுல் சபை அருங்கொடையின் 400வது வருட (1617 - 2017) நிறைவின் மகிழ்வினை சர்வதேசம் 2017ல் சிறப்பித்திருந்த நிலையில், இலங்கை தேசிய வின்சன் டீ பவுல் சபையால் கடந்த 21.07.2018, அன்று லியனகேமுல்ல - சீதுவையில் அமைந்துள்ள புனித தோமஸ் சர்வதேச கல்லூரி கலையரங்கில் மிகக் கோலாகலமாக் கொண்டாடப்பட்டது.

தூய வின்சன் டீ பவுல் தேசிய சபையின் முதன்மை ஞான ஆலோசகரான அனுராதபுர மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு நோபட் அந்ராடி O.M.I ஆண்டகையின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்ட நன்றி கூட்டுத்திருப்பலியுடன் ஆரம்பமாகிய தேசிய நிகழ்வில் வின்செஞ்சியகாரின் நடைபவனி, நடனங்கள், சிறப்புரைகள், நினைவு மலர் வெளியீடு, நினைவுச் சின்னம் அன்பளிப்பு, பரிசளிப்பு வைபவம் எனத் தொடர்ந்த இவ்விழாவில் திருகோணமலை மறைமாவட்ட சபையின் புதிய ஆன்மீக இயக்குனர் அருட்பணி. H. யூட் ஜோன்சன் தலைமையில் அறுபது உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

மேற்படி விழாவினை முன்னிட்டு தேசிய சபையானது 'எனது அயலான் யார்?' எனும் கருப்பொருளில் நடாத்திய திறந்த சித்திரப் போட்டியின் மேல்பிரிவில் திருகோணமலை மறைமாவட்டத்தில் பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலத்தின் துணைப்பங்கு அன்புவழிபுரத்தில் வதியும் திரு. திருமதி ஜோர்ஜ் லெனின் - மேரி சாந்தினி தம்பதிகளின் புதல்வி செல்வி G. L தரோசின் ( வயது 17, தி / ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, க.பொ.த. உயர்தர மாணவி) முதல் இடத்தைப் பெற்று நற்சான்றிதழ், பணப்பரிசினையும் தனதாக்கி திருகோணமலை மண்ணுக்குப் பெருமையைப் பெற்றுத் தந்துள்ளார்.

மேலுமாக அம்மாணவியை பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக அன்புவழிபுரம் சகாய அன்னை ஆலோசனை சபை, மறைமாவட்ட சபையால் கடந்த 27.07.2018இல் மறைமாவட்ட சபை அமர்விலும் செல்வி தரோசின் பொன்னாடை போர்த்தப்பட்டு, பரிசளிக்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டார்.

- தகவல் G. அல்பேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித மரியாள் பேராலயம்

திருகோணமலை மறைமாவட்டத்தின் ஜூபிலி ஆண்டை முன்னிட்டு அதனை சிறப்பிக்கும் முகமாக மறைமாவட்டத்தின் ஒவ்வொரு ஆலயங்களின் வரலாற்றையும் அதனோடு இணைந்த சிறப்புக்களையும் வெளிக்கொணரும் நோக்கில் திருமலைத்தீபம் சிறப்பு சஞ்சிகையில் இம்முறை மறைமாவட்டத்தின் புனித மரியாள் பேராலயத்தின் வரலாற்றையும் சிறப்புக்களையும் வெளிக்கொணரும் முகமாக கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக திரு. ஜோ. நோமன் பல்தசார் (முன்னாள் அதிபர்) அவர்களை சந்தித்து ஆலயத்தின் வரலாறு, பணியாற்றிய ஆயர்கள், குருக்கள், பாரம்பரிய மறக்க முடியாத நிகழ்வுகள் என்பன தொடர்பாக கலந்துரையாடினேன். அதிலிருந்து......

திரு ஜோ. நோமன் பல்தசார் அவர்களைப்பற்றி..........




(ஓய்வு பெற்ற ஸ்ரீலங்கா அதிபர் சேவையில் தரம் I ( S.L.P.S.I)
- பிறப்பு : திருகோணமலை - பெரிய கடை
- 1972 ஆசிரியராக நியமனம்
- 1991இல் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் தரம் Iஇல் நியமனம்
- தி. / சீனக்குடா தமிழ் வித்தியாலயம்
  - வரலாறு பாட ஆசரியர்
  - சிறந்த அறிவிப்பாளர்
  - தற்போது சமூக சேவை
- புனித மரியாள் பேராலய மேய்ப்புப்பணிச் சபையின் செயலாளராக மூன்று வருடம் கடமையாற்றியுள்ளார்.




1505 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி வைத்தபின் கத்தோலிக்க சமயம் இலங்கையில் பரவியது என்பது ஏற்றுக்கொள்ளப் பட்டாலும் போர்த்துக்கேயர் இலங்கை வருவதற்கு முன்பு சிலுவை அடையாளத்துடன் கூடிய புராதன கற்தூண் ஒன்று அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அது கத்தோலிக்க சமயப்பிரிவு ஒன்றான நெஸ்டோரியர்களுக்கு உரியதாகும். நெஸ்டோரியப் சமயப் பிரிவினர் வியாபாரத்தின் பொருட்டு இலங்கை வந்து சென்றுள்ளனர். அந்த சிலுவை அவ் வர்த்தகர்களின் வழிபாட்டிற்குரிய கத்தோலிக்க சமயத்தை வெளிக்காட்டும் ஒரு குறியீடாகும். கி.பி 8ஆம் 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

1795ஆம் ஆண்டில் பிரித்தானியர் திருகோணமலையை கைப்பற்றினர். அக்காலகட்டத்தில் ஒறட்டோரியன்ஸ் சபையினர் திருகோணமலையில் பணியாற்றியுள்ளனர்.1782ஆம் ஆண்டளவில் புனித மரியாள் ஆலயம் சிறிய ஆலயமாக கட்டப்பட்டிருக்கலாம். 1802இல் புதிய ஆலயமாக அமைக்கப்பட்டிருக்கலாம். 1783ஆம் ஆண்டிருந்து திருமுழுக்கு, திருமண குறிப்புகள் புனித மரியாள் பேராலயத்தில் காணப்படுகின்றன. இதனை நான் நேரடியாக பார்த்துள்ளேன். அருட்பணி டிக்கோனி அடிகளார் பங்குத்தந்தையாக இருந்தபோது பார்வையிட்டுள்ளேன். தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளது. திருகோணமலை பெரியகடைப் பிரதேசத்தின் பிரதான ஆலயம் புனித மரியாள் பேராலயம் இவ்வாலயத்தின் கிழக்குப் பகுதியில் பேராலய வீதியும், மேற்குப்பகுதியில் சுங்கவீதியும், வடக்குத் திசையில் லவாந்தர் வீதியும், தெற்குத் திசையில் புனித மரியாள் வீதியும் அமைந்துள்ளது.



1852ஆம் ஆண்டளவில் அருட்தந்தை எல். எம் கீட்டிங் அ.ம.தி அடிகளார் கோயில் முகப்பை அமைத்துள்ளார். இதற்கு பிரித்தானியப் படைவீரர்களின் உதவி கிடைக்கப்பெற்றது. 1847-1855காலப்பகுதியில் மரணமான அயர்லாந்துப் போர்வீரர்கள் 18பேரின் பெயர்கள் குறிப்பிட்டு ஆலய வளவில் உள்ள கற்பலகைகள் வரலாற்றை ஓரளவு கோடிட்டுக் காட்டுகின்றது.



1893இல் அருட்தந்தை சி. பூறி அ.ம.தி அடிகளார் கோயிலின் பலிபீடம் ஆலயத்தின் முகப்பு (டோம்) ஆகியவற்றைக் கட்டினார். அக்காலத்தில் எடுக்கப்பட்ட கறுப்பு வெள்ளை புகைபடம் ஒன்று பார்த்தேன். அது ஆலயத்தின் முன்னால் இருந்து எடுக்கப்பட்டது. அது புனித வளனார் பாடசாலை அமைக்கப்படாத காலம். கம்புகளினால் போடப்பட்ட வேலியே காணப்பட்டது.

அப்புகைப்படம் அமரர் தா. பி. சுப்பிரமணியம் ஐயாவிடம் இருந்தது. அதனைத் தாருங்கள் என்று கெஞ்சிக்கேட்டேன். அவர் மறுத்து விட்டார். அப்படம் இருந்திருப்பின அதைஇப்போது பிரசுரித்திருக்கலாம். ஜூபிலி ஆண்டை சந்திப்போம் என்று நானும் நினைக்கவில்லை. அமரர் தா. பி. சுப்பிரமணியம் அவர்களும் நினைத்திருக்கமாட்டார் என்றே கருதுகின்றேன்.

ஆரம்ப காலத்தில் திருகோணமலைப் பிரதேசம் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1893ஆம் ஆண்டில் திருகோணமலை மறைமாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டது.1893 தொடக்கம்1898 வரை காலிமறைமாவட்ட ஆயர் வான்றீத் ஆண்டகையால் நிர்வகிக்கப்பட்டது. 25.11.1898இல் திருகோணமலை மறைமாவட்ட முதலாவது ஆயராக சாள்ஸ் லவீஞ் ஆண்டகை நியமிக்கப்பட்டார்.



திருவிழாக்கள் இன்றைய காலத்தில் நடைபெறுவதுபோன்று ஆடம்பரமாக நடாத்த முடியாமல் இருந்தது. சகல திருவிழாக்களும் நடைபெற்றுள்ளது. கொடியேற்றப்பட்டு திருவிழா அன்று திருப்பலியுடன் நிறைவடைந்தது. அக்காலத்தில் திருப்பலி இன்றையகாலத்தைப் போல் அல்ல. இலத்தீன் மொழியிலேயே திருப்பலி நடைபெற்றது. நான் பீடப்பரிசகராக இருந்த போது செபங்களை இலத்தீன் மொழியில் மனனஞ் செய்தது ஞாபகம். குருவானர் செபத்தின் ஒரு பகுதியைக் கூற பீடபரிசகர் அதற்கு பதிலுரையாக இலத்தீன் மொழியில் செபங்களை கூறவேண்டும். இன்று உள்ளது போல் அல்லாமல் குருவானவர் பின்பகுதியை சபையோருக்கு காட்டிக்கொண்டே திருப்பலியை நிகழ்த்துவார். ஆசிர்வாதம் வழங்கும் சந்தர்ப்பத்தில் சபையோர் பக்கம் திரும்பி ஆசீர்வழங்குவார். இன்று உள்ள வயோதிப கத்தோலிக்க மக்களுக்கு ஞாபகம் வரும் என்று நினைக்கின்றேன்.

## துணையாலயங்கள்

### 1. புனித அந்தோனியார் ஆலயம்

ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1926
பேராலய பங்குத்தந்தை :- அருட்பணி ஹேயிம் பேர்க்கன்
ஆயர் :- திருமலை மறைமாவட்ட 2வது ஆயர் கஸ்டன் றோபிசே ஆண்டகை



மடுத்தீன் பிரகாசம் (அண்ணாவியார்) அவர்களின் தலைமையில் திருகோணமலை கோயில் வேலை செய்த வேளையில் இங்குள்ள ஒருவரால் கருங்கல் கொண்டு ஆலய குருசுமரம் செதுக்கப்பட்டு மாட்டு வண்டி மூலம் பருத்தித்துறை கலட்டி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு கொண்டு வந்து நாட்டப்பட்டது (1912). அது இன்று வரை உள்ளது.



தற்போதைய புனித அந்தோனியார் ஆலயத்திற்கு பின்பகுதியில் காணப்படும் பழைய ஆலயத்தின் எஞ்சிய அத்திவாரத்தின் ஒரு சிறிய பகுதி


இது தொடர்பாக பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலய 175வது ஆண்டு நிறைவு மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கராஜா ஜோர்ச் அன்ரனி குடும்பம் கடந்த 58 ஆண்டுகளாக இவ்வாலயத்தை பராமரித்து வருகின்றனர்.


### ஜூபிலி மண்டபம்




### 2. புனித செபஸ்தியார் ஆலயம்

ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1978
பேராலய பங்குத்தந்தை :- அருட்பணி ஜி. இ. எல் வம்பேக்
ஆயர் :- எல். ஆர் அண்டனி ஆண்டகை





### 3. திருகோணமலை பொது வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள ஆலயம்

## பாரம்பரிய நிகழ்வுகள்

பாரம்பரிய நிகழ்வுகள் என்னும் போது வாழும் மக்களின் கலைக் கலாச்சாரங்கள் பிரதிபலிக்கக்கூடிய நிகழ்வுகள் ஆகும். பெரியகடைப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து வருவதால் பரதநாட்டியம் முக்கிய நிகழ்வாக காணப்படுகின்றது. திருப்பலி ஆரம்பிக்கும் முன்னர் ஆயர் குருக்களை அழைத்து வரும் போது பரதநாட்டியம் ஆடுதல் அன்று தொடக்கம் இன்று வரை நிகழ்ந்து வரும் ஒரு நிகழ்வாகும்.

ஆரம்ப காலத்தில் பறங்கியர் இனத்தவர்கள் அதிகமாக பெரியகடைப் பகுதியில் வாழ்ந்து வந்தனர். கிறிஸ்மஸ் அன்று நள்ளிரவு 12.00 மணி திருப்பலி முடிந்ததும் ஆலய வளவிலும், வீதிகளிலும் "கபிறிஞ்ஞா" எனும் நடனம் ஆடிமகிழ்வர். பெரிய வெள்ளி அன்று ஆண்டவரின் திருப்பாடுகளின் காட்சி காண்பிப்பது ஒரு பெரிய பாரம்பரியமாக காணப்பட்டது. இன்றைய காலங்களை விட ஆரம்ப காலத்தின் திருப்பாடுகளின் காட்சிகள் அனைத்தும் சுருபங்களின் உதவியுடன் காட்சிப்படுத்தப்பட்டது. 2மணித்தியாலம் தொடக்கம் 3மணித்தியாலம் வரை இந் நிகழ்வு நீடித்தது.அதிலும் ஆண்டவர் மரித்த பின் இயேசுவின் திருவுடலை இறக்கும் காட்சிப் பறங்கியர் இனத்தவரால் நடாத்தப்பட்டது.அவ்வேளை அவர்கள் ஆசந்தியைத் தூக்கிக் கொண்டு ஏணிகளையும் எடுத்துக்கொண்டு அனைவரும் அணிவகுத்து வரும் காட்சி அலாதியானது. இயேசுவின் திருவுடலை இறக்கும் விதம் பார்த்துக்கொண்டிருப்டிபோரை புல்லரிக்கச் செய்யும். அவ்வாறான காட்சி இன்று காணமுடிவதில்லை.

தொடர்ச்சி 09ம் பக்கத்தில் ........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08ம் பக்கத் தொடர்ச்சி ....................புனித மரியாள் பேராலயம்

# மறக்க முடியாத நிகழ்வுகள்

எமது புனித மரியாள் பேராலயம் அக்காலத்தில் முன்பகுதியில் இருபக்கமும் இரண்டு கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தது. (இதனை டோம என்று கூறுவர்) அக்கோபுரத்தினுள் தான் கோவில் மணியும் இருந்தது. அது கட்டப்பட்டு நீண்டகாலம் 1893ஆம் ஆண்டில் அருட்தந்தை சி. பூரி அ.ம.தி. அடிகளாரால் கட்டப்பட்டது. அது அதிகமாக சேதமடைந்ததற்கு மணி ஒவ்வொரு நாளும் பயன்படுத்தப்பட்டது காரணமாக இருக்கலாம். அதனால் அதனை அகற்ற வேண்டிய தேவை இருந்ததினால் அருட்பணி ராகல் அடிகளாரின் காலத்தில் அந்நக் கோபுரம் இடிக்கப்பட்டது.

அதற்கு முன் ஆலயத்தின் மேலுள்ள மாதாவின் சொருபத்தை கிரெயின் இயந்திரம் தருவிக்கப்பட்டு உயரத்தில் இருந்த சுரூபம் இறக்கப்பட்ட காட்சியைக் கண்டுகளிக்க நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஒன்று கூடினர். அதனைத் தொடர்ந்து கோபுரம் உடைக்கப்பட்ட காட்சியைக் கண்டு கலங்கிப் போனோர் அனேகர். அதில் நானும் ஒருவன்.

1978இல் இடம்பெற்ற கடும் புயலிலோ, 2004இல் இடம் பெற்ற சுனாமியினாலோ எமது ஆலயத்திற்கு எந்த அனர்த்தமும் இடம்பெறவில்லை. ஆரம்ப காலத்தில் ஆலயத்தின் நடுப்பகுதி 1935ஆம் ஆண்டு மார்கழி மாதம் நத்தார் தினத்தின் பின்னர் பேராலயத்தின் கூரை உடைந்து வீழ்ந்ததாக ஒரு தகவல். அதுபற்றி சரியான விபரம் கிடைக்கப்பெறவில்லை

# பாடசாலை

தூய மரியாள் பேராலய வளவில் அந்நாட்களில் இரண்டு பாடசாலைகள் இயங்கி வந்தன. 1. புனித வளனார் தமிழ் வித்தியாலயம் 2. சேன்ட் யோசப் கல்லூரி பின்னர் சேன்ட் யோசப் கல்லூரி தற்போது இருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது.

எமது புனித மரியாள் பேராலயத்தில் இருந்து தான் தற்போதைய ஆயர் அவர்கள் உருவாகினார்.





## பங்கிலிருந்து உருவாகிய குருக்கள், துறவிகள்

**குருக்கள்:**

பேரருட்திரு நோயல் இம்மானுவேல்,
மறைமாவட்ட ஆயர்.
அருட்பணியாளர் . P. சைமன் அருளப்பா
அருட்பணியாளர G. E. L. வம்பேக்.
அருட்பணியாளர தரங்க சஞ்ஜீவ் சாமிநாதன், SJ

**துறவியர்:**

அருட்சகோதரி மேரி சிந்தியா.
அருட்சகோதரி மேரி ஹாக்
அருட்சகோதரி மாரி கொன்ஸ்டன்ஸ்
அருட்சகோதரி மேரி பிரதீபா.
அருட்சகோதரி மேரி தர்ஸினி.
அருட்சகோதரி பிரகாஸினி.
அருட்சகோதரி மேரி தனுஷியா

# பங்கை வழிநடத்திய ஆயர்கள்



பேரருட்திரு
வன்றீத் ஆண்டகை



பேரருட்திரு
சாள்ஸ் லவீஞ் ஆண்டகை



பேரருட்திரு
கஸ்டன் றொபிஷே ஆண்டகை



பேரருட்திரு
இக்னேஷியஸ் கிளென்னி ஆண்டகை



பேரருட்திரு
B. தியோகுப்பிள்ளை ஆண்டகை
(துணை ஆயர்)



பேரருட்திரு
L. R. அன்ரனி ஆண்டகை
(லியோ இராஜேந்திரம் )



பேரருட்திரு
J. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை



பேரருட்திரு
C. நோயல் இம்மானுவேல் ஆண்டகை

# பங்கில் பணியாற்றிய பங்குத்தந்தையர்கள்

- அருட்பணியாளர் ஹென்றி பூரி (இ.ச.)
- அருட்பணியாளர் சாந்தஸ்
- அருட்பணியாளர் ஒலிவர் (இ.ச.)
- அருட்பணியாளர் ஹெயிம் பேக்கர் (இ.ச.)
- அருட்பணியாளர் டுப்போன் (இ.ச.)
- அருட்பணியாளர் வெண்டன் புஷ் (இ.ச.)
- அருட்பணியாளர் அலோசியஸ் மேரி (இ.ச.)
- அருட்பணியாளர் J. அலெக்சாண்டர்.
- அருட்பணியாளர் ஜெரோம் டிசா (மறைமாவட்டக் குரு - இந்தியா)
- அருட்பணியாளர் டெரன்ஸ் ஆரன்ஸ் (இ.ச.)
- அருட்பணியாளர் ஹென்றி பொன்னையா (மறைவமாட்டக் குரு)
- அருட்பணியாளர் றிச்சட் பீரிஸ் (உதவிப் பங்குத் தந்தை – மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் V. அன்ரனி ஜோன் (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் A. செலர் (மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் G. E. L. வம்பேக் (மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் A. அருளானந்தம் (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் M. சந்திரா பெர்ணான்டோ
  (உதவிப் பங்குத் தந்தை – மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் கிறிஸ்டி பெர்னாந்து (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் சீராளன் ஞானப்பண்டிதன்
  (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் J. டிக்கோனிங் (மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் கிறிஸ்ரி பெர்ணான்டோ
  (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு)
- அருட்பணி L. பிலிப் (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் T. A.. தேவதாசன் (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் A. நோபர்ட் ஒக்கஸ் (மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர். G. A. அம்புறோஸ் (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர். பயஸ் பத்மராஜா (மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் து. A. G. ரெட்ணகுமார்
  (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு)
- அருட்பணி. P. சிறிதரன் சில்வெஸ்டர் (உதவிப் பங்குத் தந்தை ? மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் தியோபிளஸ் ராகல் (மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் அன்ரனி லியோ (மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் இக்னேசியஸ் செபஸ்தியன் (மறைமாவட்டக் குரு)
- அருட்பணி. P. ஜீவராஜ்
  (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் G. டொனேசன்
- அருட்பணியாளர். A. ஜேசுதாசன்
  (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் V. ஜோர்ஜ் திசாநயக்கா (மறைமாவட்டக்குரு)
- அருட்பணியாளர். P. ரமேஸ் கிறிஸ்டி
- அருட்பணியாளர் T. A. யூலியன்
  (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் A. ரெரன்ஸ் றாகல்
  (உதவிப் பங்குத் தந்தை – மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர். மதன்ராஜ்
  (உதவிப் பங்குத் தந்தை - அமல மரித் தியாகிகள் துறவற சபை)
- அருட்பணியாளர் றெஜினோல்ட்
  (உதவிப் பங்குத் தந்தை - அமல மரித் தியாகிகள் துறவற சபை)
- அருட்பணியாளர் T. கிங்ஸ்லி றொபட் (மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் V. A. ஜன்றின்
  (உதவிப் பங்குத் தந்தை - அமல மரித் தியாகிகள் துறவற சபை)
- அருட்பணியாளர் செபஸ்ரியன் றெவல்
  (உதவிப் பங்குத் தந்தை - அமல மரித் தியாகிகள் துறவற சபை)
- அருட்பணியாளர் G. மரிய செல்லையா
  (உதவிப் பங்குத் தந்தை – OFM Capucin துறவற சபை)
- அருட்பணியாளர் H. ஜீட் ஜோன்சன் (மறைமாவட்டக் குரு)
- அருட்பணியாளர் P. றொய்சன் ஸ்பாக்ஸ்
  (உதவிப் பங்குத் தந்தை - மறைமாவட்டக் குரு).
- அருட்பணியாளர் B. போல் றொபின்சன் (மறைமாவட்டக் குரு)

நன்றி
நாதன் சுரேஸ்
திரிகூடம், ஆலய வீதி,
மூதூர் – 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றியைக் காணவே....

Fr. NC

கவிதை வரிகளை
சரியாக வடிவமையுங்கள்

- முதலாம் இடம் ரூபா 500/-
- இரண்டாம் இடம் ரூபா 300/-
- மூன்றாம் இடம் ரூபா 200/-
- முடிவுத்திகதி 25.09.2018

### இதோ கவிதை வரிகள்

- வாழ்விலே உயர்வினைக் கண்டடைய
- வழிகளே பரந்து நிறைந்துள்ளதே
- எவ்வழியாயினும் நல்வழி நமதே
- நல்வளந்தேட நல்லதையே காண்போம்
- நீதியை மறவாது நியாயத்தை உணர்ந்தே
- உண்மைக்காய் வாழ்வதே உயர்வாகும்
- வெற்றியின் களிப்பிலே நிலைப்பது உறுதியே
- முன்வைத்த காலை பின்வாங்கி விடாமல் தொடர
- இடையூறு தடைகள் எதுவந்தாலும்

## 05ம் பக்கத் தொடர்ச்சி ..........

**பேரருட்திரு லீயோ இராஜேந்திரம் அன்ரனி ஆண்டகை**

இவரே திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் நான்காவது ஆயரும், முதலாவது சுதேச மறைமாவட்டக் குருக்களிலிருந்து உருவாகிய ஆயருமாவார். இவர் 1973ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரை மறைமாவட்ட ஆயராக கடமையாற்றினார். இவரது காலப் பகுதியில் மறைமாவட்ட மற்றும் பங்கு மேய்ப்புப் பணிப் பேரவைகளின் உருவாக்கமும் மற்றும் அதன் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டு வலுப்பெற்றன. இவரது காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தை அதிலும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைத் தாக்கியழித்த 1978ஆம் ஆண்டு சூறாவளியானது குறிப்பிடத்தக்கதாகும். அக்கால கட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான துயர் துடைக்கும் பணியில் முழுமூச்சாக செயற்பட்டதுடன், முழு மறைமாவட்டத்தையும் அப்பணியில் ஈடுபடவும் வைத்தார். இவரது பணிக்காலத்திலும் சுதேச தேவ அழைத்தல்கள் ஊக்குவிக்கப்பட்டன.

மேலும் இவரது காலத்தில் 19.12.1975இல் மறைமாவட்டத்தின் ஒரு பகுதியாகவிருந்த பொலன்நறுவை மாவட்டம் (தமன்கடவை) பிரித்தெடுக்கப்பட்டு யாழ்ப்பாண மறைமாவட்டத்திலிருந்து வேறாக்கப்பட்ட அனுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு புதிய திருத்தூது பரிபாலகப்பிரிவு உருவாக்கப்பட்டு, அதுவே பின்னர் 18.03.1982இல் புதிய அனுராதபுர மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டது. இவர் தனது பதவிக்காலம் நிறைவுறுவதற்கு முன்னதாகவே 07.04.1983இல் தமது சொந்த விருப்பின் பேரில் பதவியிலிருந்து விலகி ஓய்வினைப் பெற்றுக்கொண்டார். இவர் கடந்த 03.12.2012இல் திருகோணமலையில் காலமானார். இவரது திருவுடல் திருகோணமலை மறைமாவட்ட புனித மரியாள் பேராலயத்தில் அடக்கம் பண்ணப்பட்டுள்ளது.

**பேரருட்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை**

இவரே திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஐந்தாவது ஆயரும் சுதேச மறைவாட்டக் குருக்களிலிருந்து தோன்றிய இரண்டாவது ஆயருமாவார். இவர் 07.05.1983இல் உரோமையிலே ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு, 07.06.1983இல் மறைமாவட்டத்தின் ஆயராக கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையிலும் மறைமாவட்டத்தின் ஆயராக 32 ஆண்டுகள் அயராது பணியாற்றினார். இவர் மறைமாவட்டத்தினை பொறுப்பெடுத்த காலம் இலங்கையில் 83ஆம் ஆண்டு கறுப்பு யூலை நிகழ்வுகளுடன் சிவில் யுத்தம் நடைபெற்ற காலமாகும். அவரது பணிக்காலம் நாட்டின் யுத்தத்துடனும், உயிர் மற்றும் உடமை இழப்புக்களுடனும், இனமுறுகல்களுடனும், சந்தேகங்களுடனும், இடப்பெயர்வுகளுடனும் கழிந்த காலங்களாகும். இத்தகைய இறுக்கமான காலப் பகுதியில் அனைத்து சமய மற்றும் இன மக்களுடனும் நல்லுறவைப் பேணியவராக நற்செய்திப் பணியாற்றினார். மறைமாவட்ட தேவ அழைத்தல்களை பெரிதும் ஊக்குவித்தவராக, மறைமாவட்டக் குருக்களின் எண்ணிக்கையை பலமடங்காக உயர்த்தினார். துறவியர்களின் பணியினை மறைமாவட்டத்தில் ஊக்குவிக்கும் வண்ணம் பல புதிய துறவற சபைகளை மறைமாவட்டத்திற்கு வருவித்ததுடன், இல்லங்களையும் அமைத்தார். பொதுநிலையினின் பணியினை ஊக்குவிக்கும் வண்ணம் மறைமாவட்டத்தில் அவர்களுக்கான புதிய முன்னெடுப்புக்கள் மறைக்கல்வி நடுநிலையம் மற்றும் பொதுநிலையினர் ஆணையகத்தால் மேற்கொள்ளப்பட்டன. பலவிடங்களிலும் பல புதிய ஆலயங்கள் கட்டப்பட்டன. மறைமாவட்டத்தின் நூற்றாண்டு பெருவிழாக் கொண்டாட்டமானது 25.08.1993இல் வெகு சிறப்பாக இவரது தலைமையில் கொண்டாடப்பட்டது.

இவரது காலத்தில் யுத்தத்துடன் இணைந்து 2004ஆம் ஆண்டு டிசம்பரில் இலங்கையின் பெரும்பாலான பகுதிகளைத் தாக்கிய சுனாமி அனர்த்தமும் ஏற்பட்டது. இவ்வனர்த்தம் கிழக்கு மாகாணத்தை (மறைமாவட்டத்தை) பெரிதும் பாதித்தது. அவ்வேளையில் திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் கரித்தாஸ் - எகெட் நிறுவனத்தை பலப்படுத்தி சர்வதேச உதவிகளையும் பெற்றுக்கொடுப்பதில் முனைப்புடன் செயற்பட்டார். யுத்தம், சுனாமியால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் கல்வி நலனைக் கருத்திற்கொண்டு சிறார் பராமரிப்பு இல்லங்களை மறைமாவட்டம் முழுவதும் உண்டாக்கினார். கிறிஸ்தவ ஒன்றிப்பினையும், பல்சமய உரையாடலையும் உயர்வாக மதித்து, அதனை மறைமாவட்டத்தில் வளர்ப்பதற்கான அனைத்து பங்களிப்பினையும் செய்தார்.

இவரது காலத்தின் ஈண்டு குறிப்பிட வேண்டிய பணியாவது, திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து முதலாவது குருவானவரை ஆயராக ஏற்படுத்தியதாகும். அதனடிப்படையில் 24.05.2008ஆம் ஆண்டில் மறைமாவட்டக் குருவாகிய அருட்பணி பொன்னையா ஜோசப் அடிகளார், ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களின் திருக்கரங்களால் மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேராலயத்தில் ஆயராக திருப்பொழிவு செய்யப்பட்டு மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமிக்கப்பட்டார். அதனைத்தொடர்ந்து 03.07.2012இல் அன்றைய திருத்தந்தை 16ஆம் பெனடிக் (Benedict XVI) அவர்களால் வழங்கப்பட்ட ஆணையினால் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து புதிய மட்டக்களப்பு மறைமாவட்டம் இலங்கையின் 12வது மறைமாவட்டமாக உதயமானது. புதிய மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராக, திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் உயர்த்தப்பட்டார். அவரை புதிய மறைமாவட்டத்தின் பதவியேற்பு வரையிலான செயற்பாடுகளில் ... பதவிபிரமாணமேற்கும் பணியினையும் ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையே நிறைவேற்றினார். திருத்தந்தையின் ஆணையின் பிரகாரம் புதிய மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் நிர்வாக அலகுகளாக மட்டக்களப்பு மற்றும் அம்பாறை சிவில் மாவட்டங்களும் உள்வாங்கப்பட, திருகோணமலை மறைமாவட்டத்தின் நிர்வாக அலகாக திருகோணமலை சிவில் மாவட்டம் உள்வாங்கப்பட்டது.

2012ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதியில் தனது பணியினை மீள்வடிவமைக்கப்பட்ட திருகோணமலை மறைமாவட்டத்தில் தனது ஓய்வு வயதுக்கும் பிற்பாடு மூன்று ஆண்டுகள் தொடர்ந்த ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் திருகோணமலை மறைமாவட்டத்திற்கு ஆறாவது ஆயராக திருகோணமலை மறைமாவட்டத்தையே சார்ந்த அருட்பணி நோயல் இம்மானுவேல் அடிகளாரை பெற்றுக்கொடுத்து சாதனை புரிந்தார். அவரை ஆயராக பெற்றுக்கொடுத்ததோடு மட்டுமல்லாது அவர்களை கடந்த 25.07.2015ஆம் ஆண்டு ஆயராகவும் திருப்பொழிவும் செய்தார். அத்துடன் தனது பணியினை நிறைவு செய்துவிடவில்லை. தனது ஓய்வுக்காலத்தில் மன்னார் மறைமாவட்டத்தில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக திருத்தூது பரிபாலகராக ஓராண்டுக்கு மேற்பட்ட காலம் செயற்பட்டு அங்கும் புதிய ஆயராக பேரருட்திரு இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகையை பதவியில் அமர்த்தினார். தற்போது ஓய்வுநிலையில் திருகோணமலை மேய்ப்புப்பணி நிலையத்தில் தனது நாட்களை செலவிடுகின்றார். அவரது தொடர்பணி சிறக்க வாழ்த்துவோம்.

**பேரருட்திரு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை**

புதிதாக மீள்வடிவமைக்கப்பட்ட திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆறாவது (முதல்) ஆயராவார். தனித்த திருகோணமலை மறைமாவட்டத்தின் முதல் ஆயராக பேரருட்திரு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் 03.06.2015இல் அறிவிக்கப்பட்டு 25.07.2015இல் ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டு, மறைமாவட்டத்தின் 125வது ஆண்டு யூபிலி விழாக் கொண்டாட்ட நிகழ்வுகளில் தலைமையேற்று நடாத்துகின்றார். ஏற்கனவே நடைபெற்ற திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்ட நூற்றாண்டு விழாவின் செயற்குழு செயலாளாராகவும் கடமையாற்றிய அனுபவம் ஒரு குருவாக ஆயருக்குண்டு. தனது பணிக்காலத்தில் மூன்றாண்டுகளை நிறைவு செய்துள்ள ஆயரவர்கள் மறைமாவட்டத்தினை புதிய நோக்கிலும், சிந்தனையிலும் வழிநடத்த பல்வேறுபட்ட முயற்சிகளை பலத்த சிரமங்களின் மத்தியிலும் மேற்கொண்டு வருவது கண்கூடு. ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் மறைமாவட்டத்தில் ஆன்மீகம், கல்வி, சமூகப்பணிக்கென முன்னுரிமை கொடுத்து அதனை சகல மட்டங்களிலும் செயற்படுத்தில் ஆயர் அவர்கள் துடிப்புடன் செயற்படுவதனை காணலாம். ஆயரின் மறைமாவட்ட தொடர்பணி சிறக்க வாழ்த்துவோம், இறைவேண்டலில் இணைவோம்.

நிறைவாக:

இன்றைய திருகோணமலை மறைமாவட்டத்தில் மொத்தமாக இருபத்திமூன்று (23) மறைமாவட்ட சுதேச குருக்களும், அத்துடன் பல்வேறுபட்ட துறவறசபைக் குருக்களும், இருபால் துறவியரும் பணியாற்றுகின்றார்கள். இன்றைய திருகோணமலை மறைமாவட்டத்தில் பதினைந்து பங்குகள் செயற்படுகின்றன அத்துடன் ஏனைய ஆன்மீக, சமய, சமூகநலப் பணிகளும், கல்விநல மேம்பாட்டு பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. திருகோணமலை மறைமாவட்டத்தில் கத்தோலிக்கர் மொத்த சனத்தொகையில் 6.6% உள்ளனர். தமிழ், சிங்கள, முஸ்லீமென மூவின மக்களையும் ஒரளவிற்கு சமமாக கொண்டுள்ள திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆன்மீகப்பணி, சமயப்பணி, சமூகப்பணி சவால்கள் நிறைந்ததே.

இன்றைய மறைமாவட்டத்தின் நற்செய்திப் பணியானது வெறுமனே நகர்ப்புறத்தை மையப்படுத்தியதாக அமைந்தால் அதனால் பெரிதாக ஒன்றும் ஏற்படுவிட போவதில்லை. 125 வருடகால நீண்ட வரலாற்றினைக் கொண்ட திருகோணமலை மறைமாவட்டமானது அதன் புதிய பணித்தள மையங்களை இந்த யூபிலி ஆண்டுப் பயணத்தில் கண்டுகொள்ள வேண்டும். தெற்கே போரின் கொடுமைகளால் பெரிதும் சின்னாபின்னமாக்கப்பட்ட வளம்கொலிக்கும் மூதூரின் மாவலி ஆற்றுப் பிரதேசங்களும் அங்கு வாழும் மக்களும், வடக்கே புல்மோட்டை வீதியில் அமைந்துள்ள (சிதைந்துபோன) தமிழர் வாழ்விடங்கள், மக்கள் குடியிருப்புக்கள், கன்னியா, அனுராதபுர வீதியில் நெடுகே அமைந்துள்ள கிராமங்கள், மேற்கே கந்தளாய், தம்பலகமம் வீதியில் அமைந்துள்ள குடியிருப்புக்களும், மக்களும் எமது கரிசனைக்குரியவர்களாக மாறவேண்டும். அவர்களிடையே ஆண்டவர் இயேசுவின் நற்செய்தி நமது அன்புப் பிரசன்னத்தாலும், அன்புச் செயல்களாலும் மிளிர வேண்டும். அத்தகைய முயற்சிகளுக்கு இப்போதே இருகரம் கோர்த்து ஒருங்கிணைவோம். போரின் வடுக்களையும், இழப்புக்களையும், இடப்பெயர்வுகளையும் அதிகம் சந்தித்த திருமலை மறைமாவட்டமானது தனது 125வது யூபிலி பயணத்தினூடாக புதிய வீறுநடைபோட வாழ்த்துகின்றோம்.

அருட்பணி அ. அ. நவரெத்தினம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாண்டுக்கான சிறப்புப் போட்டி — 2018
## இறைவார்த்தைப் புதையல் போட்டி — 02
## புனித மாற்கு நற்செய்தி
## 5 – 8 அதிகாரங்கள்

**கீழ்வரும் இறைவார்த்தைகள் எந்த அதிகாரம்? எந்த வசனத்தில் இடம்பெற்றுள்ளன என்பதை எழுதுக.**

01. "இத்தலைமுறையினருக்கு அடையாளம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்"
விடை :..............................................................................
02. "இம் மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். இவர்கள் உள்ளமோ என்னை விட்டு தொலையில் இருக்கிறது"
விடை :..............................................................................
03. "சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்"
விடை :..............................................................................
04. "உமது வீட்டிற்குப் போய் ஆண்டவர் உம்மீது இரக்கம் கொண்டு உமக்குச் செய்ததையெல்லாம் உம் உறவினருக்கு அறிவியும்" என்றார்.
விடை :..............................................................................
05. "மனிதரைப் பார்க்கிறேன் அவர்கள் மரங்களைப் போலத் தோன்றுகின்றார்கள். ஆனால் நடக்கிறார்கள்"
விடை :..............................................................................
06. ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?
விடை :..............................................................................
07. "இதை யாருக்கும் தெரிவிக்கக் கூடாது" என்று இயேசு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.
விடை :..............................................................................
08. "மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப்படுத்தும்"
விடை :..............................................................................
09. "முதலில் பிள்ளைகள் வயிரார உண்ணட்டும் பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல"
விடை :..............................................................................
10. "என் கண்முன் நில்லாதே, சாத்தானே ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்"
விடை :..............................................................................

பெயர்:..................................................

முகவரி:..................................................

பங்கு:..................................................

முடிவுத்திகதி 25.09.2018

- அனைவரும் பங்குபற்றலாம்.
- போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- போட்டியாளர்கள் சரியாக விடையளித்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.


1ம் பரிசு 500/- ரூபா 2ம் பரிசு 300/- ரூபா 3ம் பரிசு 200/- ரூபா

## ஜூபிலி ஆண்டுக்கான
## நிறந்தீட்டுதல் சிறப்புப் போட்டி

- **மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.**
- **திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**
- **1,2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்**

**1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=**

நிறங்களின் வழியாக மறைமாவட்டங்களின் பெயர்களை இனங்காண்க.



பெயர் ..............................................................................

முகவரி ..............................................................................

பங்கு ..............................................................................

தரம் ..............................................................................

முடிவுத் திகதி 25.09.2018

## மறைக்கல்வி கந்போம் – 31

01. ஆரம்பத்தில் எமது மறைமாவட்டம் (திருகோணமலை) எந்த மறைமாவட்டத்துடன் இணைந்திருந்தது?
யாழ்ப்பாண மறைமாவட்டத்துடன்
02. இலங்கை எத்தனை மறைமாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது?
12 மறைமாவட்டங்கள்
03. எக்காலப் பகுதியில் இலங்கை மறைமாவட்டங்களாக பிரிக்கப்பட்டது?
இலங்கை சுதந்திரம் அடைந்தபின்
04. திருமலை மட்டுநகர் மறைமாவட்டமாக இருந்தபோது பணி செய்த முதல் ஆயர் யார்? (1898. 12 .2)
பேரருட்திரு சாள்ஸ் லவீஞ் ஆண்டகை
05. திருமலை மறைமாவட்டத்தின் பங்குகள் எத்தனை?
15 (பதினைந்து)
06. திருகோணமலை மறைமாவட்டத்தின் யாத்திரை ஸ்தலங்கள் எவை?
பாலையூற்று - புனித லூர்து அன்னை திருத்தலம்
அலஸ்தோட்டம் - இறைஇரக்கத் திருத்தலம்
குவாடலூப்பே - புனித குவாடலூப்பே அன்னை திருத்தலம்

07. திருகோணமலை மறைமாவட்டத்தின் தற்போதைய மறைக்கல்வி இயக்குனரின் பெயர் என்ன?
மறைமாவட்ட குருமுதல்வரான அருட்பணியாளர் T. கிங்ஸ்லி றொபட்
08. திருகோணமலை மறைமாவட்டத்தின் கத்தோலிக்க அரச பாடசாலைகள் எத்தனை?
08 தமிழ் , 01 சிங்களம்
09. திருகோணமலை மறைமாவட்ட ( பேராலயம்) எது?
புனித மரியாள் ஆலயம்
10. எமது மறைமாவட்டத்தில் பணியாற்றும் துறவற சபைகள் எவை?

**ஆண் துறவியர்**

அமல மரித்தியாகிகள் சபை
இயேசு சபை
கப்புச்சின் சபை
அன்பு சகோதரர் சபை

**பெண் துறவியர்**

டொமினிக்கன் சபை
கார்மேல் சபை
திருக்குடும்ப கன்னியர் சபை
சம்மனசுகள் சபை
திருச்சிலுவை கன்னியர் சபை
அன்பு கன்னியர் சபை
அன்னை தெரேசா சபை
இயேசுவின் மறைபரப்புச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01வது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1999 08 03



உதிர்வு 2017 08 21

### அமரர். றேமன் சறோன் குயின்டஸ்

நீ இல்லாமல் ஓராண்டு பூர்த்தி என்று மற்றவர் சொன்னால் தான் உணரவும் வலிக்கவும் செய்கின்றது குறுகிய காலத்திலேயே எம்மை பிரிந்து நிரந்தர உறைவிடம் சென்றது இன்னும் நெஞ்சிலிருந்து மறையவில்லை. உன் நண்பர்கள் இப்போதும் இருப்பதாகவே எண்ணி வீடு வரை வந்து ஏமாந்து சென்ற கதைகள் ஏராளம். உன் உறவினர் உன் பெயர் சொல்லி சுகம் விசாரிக்க எத்தனித்து தோற்ற கதைகளும் ஏராளம். உன் அயலவர் உன்னை நீண்ட நாட்களாக காணவில்லை வெளியு=ர் சென்றுவிட்டானா எனக்கேட்டு பின்பு உண்மை உணர்ந்து பதறிய கதைகளும் ஏராளம். நீ சோற்றை தவிர்த்த வெறு உணவுகளை மட்டும் விரும்பி உண்டது உனக்கான ஆகாரம் தீர்ந்திடப்போவதை நீ உணர்த்துவதற்காகத்தான் என எண்ணும் போது இப்போதும் நெஞ்சம் பொறுக்குதில்லையடா எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் நீ வாழ்ந்திட்டுப் போன சுவடு மறையாது. உன் ஆத்மா சாந்தியடைய நிதமும் இறைவனை வேண்டி துதிக்கின்றோம்.

ஆவணி 21ம் திகதி புனித மரியாள் பேராலயத்தில் காலை 5.45மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

தகவல் – தாய், சகோதரர்கள்.

## ஆழ்ந்த அனுதாபங்கள்



ஓய்வு பெற்ற வலயக்கல்வி பணிப்பாளர் அமரர். கிறிஸ்டி முருகுப்பிள்ளை அவர்களை இறைவன் தனது வான் வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளார். இவர் தனது இவ்வுலக வாழ்வில் செய்த அளப்பரிய செயல்கள் எண்ணிலடங்காதவை. குடும்பத்திற்கும், அயலவர்களுக்கும், நண்பர்களுக்கும் இன்னும் உதவி தேவைப்பட்ட அனைவருக்கும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தது யாமறிந்ததே.

அமரர் அவர்கள் எமது மறைமாவட்டத்திற்கு செய்த செயற்பாடுகள் ஒவ்வொன்றும் அவரது ஆன்மீக தாகத்தை எடுத்தியம்புகிறது. அவரை எம் மண் இழந்தது பெரும் இழப்பாகும்.

அவரது பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் "திருமலைத்தீபம்" ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

## தேசிய மறைக்கல்வி ஆணைக்குழு கூட்டமும் ஒன்றுகூடலும்....



## புனித நாட்டுப் பயணம்

புனித நாட்டுக்கான மூன்றாவது பயணத்தை குடும்ப பணியகம் ஏற்பாடு செய்துள்ளது. இரு வழிப் போக்குவரத்துடன் உணவு, தங்குமிடம், பிரயாணக் காப்புறுதி உட்பட ஒருவருக்கான கட்டணம் ரூ. 150,000/=



**Visiting Place**

- Church of the Annunciation
- Garden of Gethsemane
- Mount of Beatitudes
- Church of Multiplication
- Baptism
- Boat Ride in the sea of Galilee
- Church of Agony
- Calvary-Tomb of Jesus
- Church of the Ascension
- Jericho/Sycamore tree also including a visit to Nazareth
- Last Supper Room
- Bethlehem
- Church of Nativity
- Church of Holy Sepulcher
- Way of the Cross
- Cana
- Milk Grotto

- **ஸ்டார் ஹோட்டல்களில் தங்குமிட வசதி**
- **கேபிள் கார் பயணம் ஜெரிக்கோவிலிருந்து ஆண்டவர் சோதிக்கப்பட்ட மலை வரை**
- **2019ம் ஆண்டில் புறப்படும் திகதி 2019.04.09**
- **முதல் பதிவு செய்யும் 10 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்**
- **பதிவுகளுக்கு முந்துங்கள். பதிவு செய்ய வேண்டிய இறுதித்திகதி 30.08.2018**

தொடர்புகளுக்கு:

**அருட்பணி றொஹான் பேர்னாட்,**
பணிப்பாளர், புனித சூசையப்பர் மேய்ப்புப்பணி நிலையம்,
உப்புவெளி, திருகோணமலை. 077 677 1119



அருள்பணியாளர்

### P. சைமன் அருளப்பா

(இயேசு சபைத் துறவி)

அருள்பணியாளர் P. சைமன் அருளப்பா (இயேசு சபைத் துறவி) திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், புனித மரியாள் பேராயப் பங்கைச் சேர்ந்தவரும் ஆவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் மேற்கொண்டார். அதன்பின்பு தனது குருத்துவக் கல்வியை இந்தியாவில் முடித்தபின்பு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1952ம் ஆண்டு இவர் திருகோணமலை மறைமாவட்டத்தின் நிலாவெளிப் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார். இப்பங்கு நிலாவெளி, குச்சவெளி, சாம்பல்தீவு என்ற கிராமங்களை உள்ளடக்கியதாக இருந்தது. ஆரம்ப காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்த மக்களிடையே இறை பக்தியை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டார். அதன் முதற் கட்டமாக தானே நற்கருணை ஆண்டவருக்கு முன்பாக பலமணி நேரம் செலவளித்து, மக்களுக்காக, அவர்களின் தேவைகளுக்காக மன்றாடினார். ஒரு சில கடுமையான ஒறுத்தல் முயற்சிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு தன்னை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்தார் தனது பங்கு மக்களிடையே அன்னை மரியாவினுடைய பக்தி முயற்சிகளை, சிறப்பாக செமாலைப் பக்தி முயற்சியை வெகுவாக தூண்டி எழுப்ப மிகவும் சிரத்தையோடு முயற்சிகளை மேற்கொண்டார்.

நிலாவெளிப் பங்கை இவர் பொறுப்பேற்ற பொழுது புனித சூசையப்பர் தேவாலயம் தூண்கள் எழுப்பப்பட்டு, தென்னங் கிடுகுகளால் வேயப்பட்ட சிற்றாலயமாகவே இருந்தது. அந்நாள் ஆயரின் அனுமதியுடனும் கிராம மக்களின் உதவியுடனும் பல சிரமங்களுக்கு மத்தியில் இந்தத் தேவாலயத்திற்கு ஒரு நிரந்தரமான கட்டடத்தை அமைத்துக்கொடுத்த பெருமை இவரைச் சாரும்.

நிலாவெளிக் கிராம மக்கள் தங்கள் குழந்தைச் செல்வங்களுக்கு கல்வியறிவைப் புகட்ட அனுபவித்த கஷ்டங்களையும், சிரமங்களையும் நேரிலே பார்த்து, கவலையுற்று, இதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடாக "நிலாவெளி புனித சூசையப்பர் றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை" என்ற பெயருடன் ஒரு கல்விக்கூடத்தை அமைத்து, 10. 03. 1954ம் ஆண்டு திருகோணமலை ஆயர் பேரருட்திரு இக்னேசியஸ் கிளென்னி ஆண்டவகை அவர்களால் பாடசாலை திறப்பு விழாவையும் வெகு விமரிசையாக முடித்து வைத்தார்.

புனித சூசையப்பர் தேவாலயத்தையும், நிலாவெளி புனித சூசையப்பர் றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலையையும் நிறுவிய காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரின் பலத்த எதிர்ப்பையும் அச்சுறுத்தல்களையும் இடையூறுகளையும் உயிர் ஆபத்து நிறைந்த மிரட்டல்களையும் துணிவோடு சந்தித்து, ஒறுத்தல் நிறைந்த ஆன்மீக வாழ்வினாலும், அயராத செபத்தினாலும் வெற்றியோடு தம் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றார்.

இறைவனின் அதி உயர்ந்த மகிமைக்காக அர்ப்பணத்தோடு வாழ்ந்து, அயராது பணியாற்றிய இவ் அருள்பணியாளர் இறைவனின் சந்நிதியை அலங்கரிக்கும் பேற்றினைப் பெற்றிடவேண்டும் என்ற ஆசையோடு இவருக்காக செபிக்கின்றோம்.

உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org